Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 84 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 01ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(18.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 21 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## எரிபொருள் விலை குறைப்பு



02 பக்கம்

## சீரற்ற காலநிலை 56,630 பேர் பாதிப்பு

**நா. தினுஷா**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால், 14 ஆயிரத்து 309 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 630 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

» 02 பக்கம்

# 2023இல் தேர்தல்!

## மார்ச்சில் நாடாளுமன்றத்தை கலைக்க ரணில் அதிரடித் தீர்மானம்

**நமது விசேட செய்தியாளர்**


நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை தொடரும் பின்னணியில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தன.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணிலுக்கு அடுத்த வருடம் மார்ச் மாதமே கிடைப்பதால், அந்த அதிகாரம் கிடைத்த கையோடு அவர் அதனை செய்வாரெனவும் அதன்படி அடுத்த வருடம் சித்திரைக்குப் பின்னர் பொதுத் தேர்தல் நடக்குமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முன்னாள் நிதி அமைச்சர்...

» 02 பக்கம்

## வெள்ளம் ஏற்படும் ஆபத்து; நாடாளுமன்றத்தை சூழ மணல் மூடைகள்



» 02 பக்கம்

## புனர்வாழ்வுப் பணியக சட்டத்தை மீளப்பெறுக!

HUMAN RIGHTS WATCH

### அரசை வலியுறுத்துகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

**நமது விசேட செய்தியாளர்**

இராணுவத்தால் நடத்தப்படும் புனர்வாழ்வு மையங்களில் மக்களைத் தடுத்து வைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள புனர்வாழ்வுப் பணியக சட்டமூலத்தை அரசாங்கம் மீளப்பெற வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

புனர்வாழ்வுப் பணியக சட்டமூலமானது...

» 02 பக்கம்

## அமெரிக்காவை நம்பி ஏமாந்தார் கோட்டா



### விமல் எம்.பி. தெரிவிப்பு

**நா. தினுஷா**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவை நம்பி நாட்டை முழுமையாக நெருக்கடிக்குள் தள்ளிவிட்டதாகவும் கோட்டாவின் நம்பிக்கையை அமெரிக்காவும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அவரை ஏமாற்றி விட்டதாகவும் உத்தர லங்கா சபா, தேசிய சுதந்திர முன்னணி...

» 02 பக்கம்



காணாமலாக்கப்பட்டோருக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமது பிள்ளைகளுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு, தாய்மார் கண்ணீருடன் கதறி அழுது தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

(படப்பிடிப்பு: கிர்ஷான் காரியவசம்)

## ஜனாதிபதி மீது பேராயருக்கு நம்பிக்கையில்லை!

மக்கள் ஆணையின்றி பதவிக்கு வந்துள்ள தற்போதைய தலைவர் மக்களுக்கு நீதி வழங்குவாரென்று நம்ப முடியாதென பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக நாட்டின் ஏனைய அரசியல் தலைவர்களும் ஒருவருக்கொருவர் குற்றஞ்சுமத்தி அதிகாரத்துக்காக செயற்படுகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

» 02 பக்கம்



## கொத்து ரொட்டியின் விலை குறைந்தது

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

எலெக்சன் வருகுதாம்... அப்ப இனி ஊர்களில அரசியல்வாதியள தாராளமா காணலாம் என்னங்கோ...



## உஷ்



கொழும்பு மாவட்டத்தின் முன்னாள் தமிழ் அரசியல்வாதி ஒருவர், நிதி மோசடி செய்த பெண்ணிடம் பெருமளவு பணத்தைக் கொடுத்து ஏமாந்ததை நேற்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா...?

இப்போது இழந்த பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள அவர் கோயில் கோயிலாய் அலைவதாக தகவல்...

## இலங்கையில் சீன தொழில்நுட்பம் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

**தமிழக புலனாய்வுத்துறை தகவல்**

இலங்கையில் சீனாவின் அதியுயர் தொழில்நுட்ப உபகரணங்களை நிலைநிறுத்துவது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

10 பக்கம்

## இளம் புத்தாக்குனராக வேம்படி மாணவி தெரிவு



வளர்முக நாடுகளின் பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் இலங்கைக் கிளையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிறப்புரிமையியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் துறையும் இணைந்து தேசிய ரீதியில் மாணவருக்கான...

» 02 பக்கம்

## ஓய்வூதியத்துக்கு விண்ணப்பிக்க 03 மாத முன்னறிவித்தல் அவசியம்

### அரச ஊழியர்களுக்கு விசேட சுற்றறிக்கை வெளியீடு

ஓய்வுபெறவுள்ள அரச ஊழியர்களுக்கான விசேட அறிவிப்பொன்றை ஓய்வூதிய திணைக்களம் வழங்கியுள்ளது.

அதன்படி ஓய்வுபெறவுள்ள அரச ஊழியர்கள் தாம் ஓய்வுபெறும் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன் ஓய்வூதிய விண்ணப்பத்தை அனுப்புவது அவசியமென ஓய்வூதிய திணைக்களம் அறிவித்துள்ளது.

» 02 பக்கம்

## மன்னாரிலிருந்து அகதிகள் ஆறு பேர் தமிழகத்தில் தஞ்சம்



### தனுஷ்கோடியில் மீட்டது கடலோர காவல்துறை

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் தமிழர்கள் அறுவர் நேற்றுக் காலை தமிழகம், தனுஷ்கோடி முதலாம்...

» 02 பக்கம்



## ராஜபக்ஷக்களுக்கு மீளெழுவது கடினம்

### கூறுகிறார் குமார வெல்கம

**கே. சுபானி**

ஜனாதிபதி எதிர்பார்த்த உதவிகள் இதுவரை கிடைக்கப்பெறாததால் அடுத்த ஆண்டு இதனைவிட நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கக்கூடுமெனத் தெரிவித்துள்ள...

» 02 பக்கம்

## பிரிவினைவாதிகளை ஆதரிக்கும் சொல்ஹெய்ம்

### மீண்டும் அரங்குக்கு வந்துள்ளதாக கம்மன்பில குற்றச்சாட்டு

நாட்டை துண்டாக்கக்கூடிய பிரிவினைவாதிகளை ஆதரிக்கும் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் அரங்குக்கு வந்துள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில்...

» 02 பக்கம்

## வழிபாட்டுத் தலங்களுக்கு மின் கட்டண நிவாரணமா?

### அதனை அறிவிக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடையாதென்கிறார் அமைச்சர் காஞ்சன

வழிபாட்டுத் தலங்களுக்கான மின்கட்டணத்துக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் தீர்மானிப்பதற்கான அதிகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லையென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

» 02 பக்கம்

## 2023 இல்...

பெசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் தொலைபேசி வாயிலாக இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தேர்தல் ஒன்று நடைபெறுமாயின் கூட்டணியினை எவ்வாறு அமைத்துக்கொள்வது என்பது தொடர்பில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியை விமர்சிக்கின்ற அல்லது விமர்சித்தவர்களுக்கும், கட்சியை விட்டு விலகிச்சென்ற எந்தவொரு நபருக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வேட்பு மனுவினை வழங்காதிருப்பதற்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினை விமர்சித்த ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்களுக்கும் வேட்பு மனுவிற்கான சந்தர்ப்பத்தினை வழங்காதிருக்கவும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சி இணைந்து கூட்டணியாக தேர்தலில் களமிறங்கும் பட்சத்தில், கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு ஒதுக்கீட்டு அடிப்படையிலேயே வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என கலந்துரையாடலின்போது தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**புதிய கூட்டணி**

இதேவேளை ஆளும் கட்சியின் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதிய அரசியல் கூட்டணியொன்று உருவாக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியிலிருந்து சுயாதீனமான உறுப்பினர்களே இவ்வாறு புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கவுள்ளனர்.

இந்த புதிய கூட்டணியில் சில அமைச்சரவை அமைச்சர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க உள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டணியில் இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த டயனா கமகே, அரவிந்த குமார், டலஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவங்ச ஆகியோரும் இந்தப் புதிய கூட்டணியில் இணைந்து கொள்ளவுள்ளதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளம் ஏற்படும்...

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் கடும் மழையுடனான காலநிலை காரணமாக தியவன்னா ஓயாவின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் நாடாளுமன்ற வளாகமும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தியவன்னா ஓயாவின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருவதாகவும், எதிர்வரும் நாட்களில் மழை நிலைமை தொடர்ந்தால், நீர் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டும் எனவும் இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்துக்குள் தண்ணீர் வருவதை தடுக்கும் வகையில், தியவன்னா ஓயாவில் நேற்று முன்தினம் முதல் மணல் மூடைகளை குவிக்கும் பணியை இலங்கை இராணுவம் தொடங்கியது.

இதற்கிடையில், நாடாளுமன்ற வளாகத்திற்கு கீழே அமைந்துள்ள குழு அறைகளில் இருந்த அனைத்து நாற்காலிகள் மற்றும் மேசைகள் பாதுகாப்பு நடவடிக்கையாக முதல் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டன.

நாடாளுமன்ற வளாகத்துக்கு தண்ணீர் வந்தால், கீழே உள்ள குழு அறைகள்தான் முதலில் வெள்ளத்தில் மூழ்கும் என்பதால், நாடாளுமன்றத் தலைவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை, தியவன்னாவின் நீர்மட்டத்தை இலங்கை கடற்படையின் குழுவும், நாடாளுமன்ற பொலிஸ் அதிகாரிகள் குழுவும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

தியவன்னாவில் தேடுதல் நடவடிக்கைகளுக்காக பல கூடுதல் கப்பல்களும் அனுப்பப்பட்டுள்ளன.

உயர் பிரதேசங்களில் பெய்து வரும் மழையினால் தியவன்னா ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஜனாதிபதி மீது...

கட்டான, பட்டபத்தல புனித தெரேசா தேவாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த உற்சவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தாத குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ், மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன வெறும் வாய் வார்த்தைகளால் காலம் கடத்துவதாக பேராயர் குறிப்பிட்டார்.

## சீரற்ற காலநிலை...

அதற்கமைய அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டு நேற்று (17) வரையில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இன்று (18) இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய ஆகிய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் ஒருசில இடங்களில் 75 மீல்லி மீற்றருக்கும் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டளவில் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் சில பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேலைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பினூடாக பொத்துவில் வரையான கரையோர பிரதேசங்களில் இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். அதேவேளை, கடலலையும் சற்று சீற்றமாக காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டார்.

இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பங்களில் கடற்றொழிலாளர்கள் மிக அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சீரற்ற கால நிலையில் ஓரளவு வீழ்ச்சி தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

அதற் கமைய, தற்போது நிலவும் எதிர்வரும் சில தினங்களில் அனர்த்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாக இருக்குமென நாங்கள் நம்புவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்த சீரற்ற காலநிலையினால் 12 மாவட்டங்கள், 58 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், 11 ஆயிரத்து 149 குடும்பங்கள், 49,873 பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திகதி 16.10.2022
ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4910
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,263,430.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 2 6 9 2 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 27,875,543.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3152
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,216,360.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 19 43 64 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 82,693,961.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1365
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,453,440.00
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 4 2 4 0 5 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,381,627.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 940
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,537,820.00
வெற்றி இலக்கினம் H
வெற்றி இலக்கங்கள் 15 22 54 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 130,111,124.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 219
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,420,740.00
இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 11 17 18 37
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,738,380.80

கோடி 27 Mega POWER + மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1258
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,391,040.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 276,246,002.00
M 19 08 17 26 43
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## மன்னாரிலிருந்து...

மணல் திட்டுக்குச் சென்று தரையிறங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களை மணல் திட்டில் இருந்து பத்திரமாக மீட்ட இந்திய கடலோர காவல்படையினர் இராமேஸ்வரம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதத்திலிருந்து இலங்கையில் இருந்து இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக சென்ற வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் மன்னார் மாவட்டம் பேசாலையைச் சேர்ந்த அந்தோணி மரிய கொரட்டி, புலக்ஷன், கனுவியா, சசிகுமார், சனுஜன், அந்தோணி பெர்னாண்டோ ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அருகே உள்ள முதல் மணல் திட்டில் வந்திறங்கினர். இவர்கள் பொலிஸ் விசாரணைக்குப் பிறகு மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 181 ஆக உயர்ந்துள்ளது.

## பிரிவினைவாதிகளை...

நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை துண்டாக்க கூடிய பிரிவினைவாதிகளின் தேவைக்கு ஆதரவளிக்கும் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் அரங்குக்கு வந்துள்ளார். இம்முறை காலநிலைசார் ஜனாதிபதியின் ஆலோசகராகவே நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் சுற்றுச்சூழல் சார்ந்த வேலைத்திட்டத்துக்கு அதிகளவு நிதி வழங்கும் நோர்வேயின் வேண்டுகோளுக்கு இணங்கவே, எரிக் சொல்ஹெய்ம் அந்த வேலைத்திட்டத்தின் பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இருந்தபோதும், அவர் நியமிக்கப்பட்டு 24 மாதங்களில் வெளிநாட்டு பயணங்களுக்காக மாத்திரம் 5 இலட்சம் டொலர் நிதியை செலவளித்தமை, வெற்றிதரும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்காமை, சுற்றுச்சூழல் சார் நிபுணர்களின் பாரதூரமான விமர்சனங்களுக்கு உள்ளாகியமை, உள்ளக கொள்கைத் திட்டங்களை விமர்சனம் செய்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல்சார் வேலைத்திட்டத்திலிருந்து பதவி விலகுமாறு கோரப்பட்டிருந்தது.

இவ்வாறு, கடும் விமர்சனங்களுக்குள்ளான நபரொருவர் எதற்காக காலநிலைசார் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார் என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

உண்மையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் விளக்கமளிப்பது அவரின் கடமை இல்லை. மாறாக அவர் நன்கறிந்த தமிழ் பிரிவினைவாதிகளின் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே இவரின் கடமையாகும்.

மேலும், இலங்கைக்கு நிவாரணம் வழங்கும் வாய்ப்பு தமக்கு இல்லை என்று இந்தியா அறிவித்துள்ளது. சீனாவுடனான சுந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை ஒத்திவைத்து வருவதால், சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வரை அவர்களிடமிருந்தும் நிவாரணம் கிடைக்கப்போவதில்லை. மறுபுறம் ஜப்பான் கடன் மறுசீரமைப்புக்கு மாத்திரமே இணக்கம் தெரிவித்துள்ளது. போரின் நிலைமையின் காரணமாக ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு உதவி புரியும் நிலைமையில் இல்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தமக்கு உதவி வழங்கக்கூடிய ஒரேயொரு மாற்றுத் தீர்வு தமிழ் பிரிவினைவாத பிரிவினர் என்பதை ஜனாதிபதி நன்கு அறிந்து வைத்துள்ளார். கப்பம் கோருவதனூடாகவே தமக்கான வருமானத்தை தமிழீழ விடுதலை புலியினர் தேடிக்கொண்டதாக நாட்டில் பெரும்பாலானோர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவறான நிலைப்பாடாகும்.

அதற்கமைய, தமிழ் பிரிவினைகளின் கோரிக்கைகள் பெற்றுக்கொடுத்து அவர்களை மகிழ்வுக்குட்படுத்தி அவர்களின் பணத்தை நாட்டுக்குள் கடனாகவும் முதலீடாகவும் கொண்டு வருவது எரிக் சொல்ஹெய்மின் பிரதான கடமையாகும்.

பிரிவினைவாதிகளின் டொலர்களை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நாங்கள் எதிர்க்க போவதில்லை. ஆனால், பிரிவினைவாதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிட வேண்டாம் என்பதே எங்களின் கோரிக்கையாகும். தற்போதுள்ள பசியை தணிப்பதற்காக மீண்டும் நாட்டை யுத்த தீக்குள் தள்ள நாங்கள் தயாராக இல்லை என்றார்.

மேலும், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் ,

மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிறந்த வரலாறு இருக்கிறது. அவரை வீணப்பதற்காகவே மீண்டுமு; அரசியலுக்காக பயன்படுத்துகிறார்கள். அவருக்கு இருந்த கௌரவத்தை இல்லமலாக்கும் செயற்பாடுகளின் பின்னணியில் அவரின் குடும்பத்தாரே இருக்கிறார்கள்.

பொதுஜன பெரமுண தேர்தலுக்கு பயம் இல்லாவிட்டால், யாருக்கு பயம் என்பதை வெளிப்படுத்த வேண்டியது ஜனாதிபதியின் கடமையாகும் என்று சுட்டிக்காட்டினார்.

## கொத்து ரொட்டியின்...

கொத்து ரொட்டியின் விலையை 50 ரூபாவால் குறைத்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் மொத்த விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை கருத்திற் கொண்டே குறித்த விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி கொத்து ரொட்டியின் விலை 50 ரூபாவினால் குறைக்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மா உற்பத்தியிலான ஏனைய பொருட்களின் விலை குறைக்கப்பட மாட்டாது என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், தற்போது கொத்து ரொட்டி ஒன்றின் விலையானது ரூபா 500 முதல் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வுப்...

இராணுவப் பணியாளர்களால் கட்டுப்படுத்தப்படும் நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதற்காக பாதுகாப்பு அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப் பட்டுள்ள புனர்வாழ்வு முயற்சிகள், குற்றஞ்சாட்டப் படாமல் இருப்போரை தண்டனைக்குட்படுத்தும் புதிய வடிவமாகும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலமானது சித்திரவதை, தவறாக வழிநடத்துதல், முடிவில்லாத தடுப்புக்காவல் ஆகியவற்றுக்கு வழிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களை குறிவைத்து இந்தச் சட்டம் பயன்படுத்தப்படலாம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஒய்வூதியத்துக்கு...

இந்த நடைமுறையை முறையாக பின்பற்றினால், ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் ஓய்வூதியப் பலன்களை ஓய்வு பெறும் நாளில் இருந்து வினைத்திறனாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு இடையில் 60 வயதை எட்டிய நிலையில் ஓய்வு பெறும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தை தாண்டும் என்றும் ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது 60ஆக குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் கட்டாய ஓய்வு பெறும் வரை பணி நீடிப்புடன், ஓய்வு பெறுவதற்கான விருப்ப வயது 55ஆக குறைக்கப்பட்டுள்ளது.

திறைசேரி செயலாளரால் கையொப்பமிடப்பட்டு, அனைத்து, அரச நிறுவன தலைவர்கள், அரச வங்கிகள் மற்றும் சட்டப்பூர்வ சபைகள் உட்பட வணிக நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு, இது தொடர்பான புதிய சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.

அதன்படி, எந்தவொரு அதிகாரியும் இந்த வயது வரம்பைத் தாண்டி (55) பணியாற்ற விரும்பினால், அவர், செயல்திறன் மற்றும் செயல்திறன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்காமல் 60 ஆண்டுகள் கட்டாய ஓய்வு வயது வரை தொடர்ந்து பணியாற்றலாம்.

எவ்வாறாயினும், 55 - 60 வயதிற்குள், ஒரு அதிகாரி தனது விருப்பப்படி பணியிலிருந்து ஓய்வு பெறலாம்.

இதேவேளை தற்போது 60 வயதிற்கு மேல் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் இந்த ஆண்டு டிசம்பர் 31 அல்லது அதற்கு முன் 60 வயதை நிறைவு செய்பவர்கள் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் ஓய்வு பெற வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வழிபாட்டுத் தலங்களுக்கு...

வழிபாட்டுத் தலங்களுக்காண மின்கட்டணத்துக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்கழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தாலும், அதற்கான அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வழிபாட்டுத் தலங்களுக்கான மின்கட்டணத்துக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமாயின், யாருடைய அனுசரணையில் அது வழங்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

அத்துடன் அதனை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்தும் வேலைத்திட்டமொன்றை வழங்கவேண்டும் என்றார்.

## எரிபொருள்...

எரிபொருளின் விலையைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 40 ரூபாவினாலும், லங்கா ஓட்டோ டீசலின் விலை 15 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (17) இரவு 9 மணிமுதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோலின் புதிய விலை லீற்றருக்கு 370 ரூபாவாகவும், லங்கா ஓட்டோ டீசல் லீற்றருக்கு 415 ரூபாவாகவும் இருப்பதுடன் ஏனைய பெற்றாலிய பொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

முதலில் எரிபொருள் விலை குறைப்பு தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கை விடுத்திருந்த நிலையில், பின்னர் ஐ.ஓ.சி. நிறுவனமும் அறிவித்தது.

## இளம் புத்தாக்குனராக...

புத்தாக்கப் போட்டி ஒன்றை நடத்தியிருந்தது.

இதில் 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண் இளம் புத்தாக்குனராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி மதுரா அருந்தவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் சிறந்த பெண் புத்தாக்குனருக்கான பதக்கத்தை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சித்தானந்த லியனகே அணிவித்ததுடன் இவருக்கான சான்றிதழை வளர்முக நாடுகளுக்கான பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் தலைவி பேராசிரியர் சுகந்திகா சுரேஷ் வழங்கினார். நிகழ்வு கடந்த 14ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூதவை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

## அமெரிக்காவை...

ஆகியவற்றின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

உத்தர லங்கா சபாவின் மாத்தறை மாவட்ட கூட்டமொன்று கடந்த சனிக்கிழமை (15) இடம்பெற்றது. இந்த கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையை, நாட்டை முற்றாக முடக்குவதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள சிலர் முயற்சிக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் தற்போது அந்தப் பாதையிலேயே பயணிக்கின்றது.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகைக்கு சமமான கடன்தொகை, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான நான்கரை ஆண்டு ஆட்சி காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதிச் சந்தையில் பெற்றுக்கொள்ளப்படும் கடனும் நிவாரண காலம் வழங்கப்படுவதில்லை. வட்டி வீதமும் அதிகமாகும். அதற்கமைய, நிதிச் சந்தையில் நாம் இதுவரையில் பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 80 சதவீதமான கடன்தொகை ரணிலின் அரசாங்கத்திலேயே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கடன் தொகைக்கான வட்டி வீதத்தை மீள் செலுத்துவதற்கான காலம் வரும்போது, ஒரேயடியாக கடன்தொகை மேலும் அதிகரிக்கும். நாட்டில் தற்போதுள்ள நிலைமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே அடித்தளமிடப்பட்டது.

அதன் பாதிப்பு நல்லாட்சி அரசாங்கத்தினரை பாதிக்கவில்லை. அதன் பாரதூரமான விளைவுகளை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சந்திக்க நேர்ந்தது. பாதிப்பு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படும்பேதே, இதனை சாதாரணமாக கருதிவிடாமல் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டும் என்று கோட்டாவை வலியுறுத்தியிருந்தோம். இல்லாவிட்டால், இந்த நிலைமை நாட்டுக்குள் தீவிரத்தன்மையை ஏற்படுத்திவிடும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், அவர் நாங்கள் சொன்னதை கேட்காமல், அமெரிக்காவிடமும் ஞானா அக்காவிடமும் உதவிகளைப் பெற்றார். கோட்டாபய ராஜபக்ஷவை வைத்து அமெரிக்கா நாட்டில் அதன் விளையாட்டை ஆரம்பித்தது. அமெரிக்க பிரதிநிதிகள் நாளாந்தம் கோட்டாவை சந்தித்து அனைத்து உள்ளக பிரச்சினைகளிலும் தலையிட்டார்கள்.

ஒரு விடயத்தை செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டு, ஏனையவர்களிடம் மாற்றுக்கருத்துக்களை தெரிவித்து நாடகமாடினர். கோட்டாவை சந்தித்த கையோடும் செல்லும் அமெரிக்க பிரதிநிதிகள் முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபரை சந்தித்து பேசப்பட்ட விடயங்களை மாற்றிவிடும் நிலையே கடந்த காலங்களில் இடம்பெற்றது. இறுதியில் அமெரிக்காவின் ஆலோசனைகள் பின்பற்றி நாட்டையும் நெருக்கடிக்குள் தள்ளி, ஆபத்தின் இறுதி விளிம்புவரை சென்று தப்பித்துவிட்டார் என்றார்.

## ராஜபக்ஷக்களுக்கு...

புதிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம, ராஜபக்ஷக்களுக்கு மீளெழும்புவது கடினம் எனக் குறிப்பிட்டார்.

நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு திறமையிருப்பினும், அதற்கு ராஜபக்ஷக்கள் இடமளிக்க மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எனினும், இது உலகின் ஏனைய நாடுகளையும் பாதித்துள்ளது. ஆனால், இலங்கையில் நிலைமை மிக மோசமடைந்துள்ளது.

ஜனாதிபதி எதிர்பார்த்த உதவிகள் எமக்கு இன்னும் கிடைக்கபெறவில்லை. எனவே, அடுத்த ஆண்டு இதைவிட இன்னும் கடினமான சூழ்நிலையில் வாழ்க்கையை கொண்டுசெல்ல வேண்டியிருக்கும். முன்னாள் தலைவர்கள் உட்பட நாம் அனைவரும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. இவருக்கு அந்த திறமை இருந்தாலும், மொட்டுக்குள் உள்ள ராஜபக்ஷக்கள் அதனைச் செய்யவிடமாட்டார்கள்.

ராஜபக்ஷக்களுக்கு மீளெழும்புவது கடினம். இதனை நான் தெளிவாகக் கூறுகின்றேன். ஏனெனில் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். அவர்கள் ராஷபக்ஷக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றார்.



சீனத் தூதுவர் ஸி செங்ஹொங் மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (17) கொழும்பில் இடம்பெற்றிருந்தது. நாட்டில் தற்போதுள்ள நிலைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி லொகுகே, பவித்ரா வன்னியாராச்சி, ரமேஷ் பத்திரண, சுரேன் ராகவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

# அ'புரத்தில் கோர விபத்து: மூவர் பரிதாப மரணம்!





அநுராதபுரம் - பாதெனிய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்று (17) இடம்பெற்றுள்ளது.

அத்துடன், அவர்கள் பயணித்த கார் மரத்தில் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்விபத்துச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்யாவின் பிரதிப் பிரதமரை சந்தித்தார் அமைச்சர் சுசில்

## இலங்கைக்கு எரிபொருள் பெறுவது குறித்து கலந்துரையாடல்



ரஷ்யாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கலாநிதி சுசில் பிரேமஜயந்த, ரஷ்யாவின் பிரதிப் பிரதமர் அலெக்சாண்டர் நோவக்கை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கு நீண்ட காலமாக ரஷ்யா அளித்துவரும் ஆதரவுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கு எரிபொருள் வழங்குவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் உயர்கல்விக்காக ரஷ்யா சென்றுள்ள மாணவர்களின் நலன் குறித்தும் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் காலத்தில் இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய ஆதரவிற்கும் அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் திருமதி ஜனிதா லியனகே உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# வெள்ளை அரிசியின் மொத்த விலை குறைவடைந்துள்ளது



இறக்குமதி செய்யப்படும் வெள்ளை அரிசியின் மொத்த விலை 160 ரூபாவாக குறைவடைந்துள்ளது. அதன் சில்லறை விலை 178 முதல் 185 ரூபாவாகக் காணப்படுகிறது.

சிறப்பு அங்காடிகளில் இறக்குமதி செய்யப்படும் வெள்ளை அரிசியின் விலை 200 முதல் 210 ரூபா வரை விற்கப்படுகிறது.

உள்நாட்டின் வெள்ளை அரிசி ஒரு கிலோ 210 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. புறக்கோட்டையில் மாத்திரமன்றி, குருநாகல், மாத்தறை, பொலனறுவை, தென் மாகாணத்தின் பல நகரங்களிலும் அரிசியின் விலை குறைவடைந்துள்ளது

# உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் இலங்கை பல்கலைப் பேராசிரியர்களும்




களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த நான்கு பேராசிரியர்கள் உலகின் முதல் 2 சதவீத விஞ்ஞானிகள் பட்டியலில் உள்ளனர்.

மருத்துவ பீடத்தின் பேராசிரியர் ஜானக டி சில்வா, களனி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரும் சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியருமான நிலாந்தி டி சில்வா, பொது சுகாதார பீடத்தின் பேராசிரியை அனுராதனி கஸ்தூரிரத்ன, பேராசிரியர் அசித டி சில்வா ஆகியோர் இப்பட்டியலில் உள்ளடங்குகின்றனர்.

எல்சேவியர் வழங்கிய ஸ்கோபஸ் தரவையைப் பயன்படுத்தி, அமெரிக்காவிலுள்ள ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு குழு இந்தப் பகுப்பாய்வை நடத்தியது.

இலங்கையைச் சேர்ந்த 38 விஞ்ஞானிகளின் பட்டியலில் நான்கு பேராசிரியர்களும் உள்ளடங்குகின்றனர்.

# யானை தாக்குதலில் குடும்பஸ்தர் பலி

## சேருவில பகுதியில் சம்பவம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை சேருவில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் யானையின் தாக்குதலினால் நான்கு பிள்ளைகளின் தந்தை நேற்று (17) காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


சேருவில - தங்கநகர் பகுதியிலுள்ள குளத்துக்கு மீன் பிடிப்பதற்காக சென்று வீடு திரும்பும்போது யானை தாக்கியதாகவும் இதனால் 4 பிள்ளைகளின் தந்தையான அதே பகுதியைச் சேர்ந்த குணசேகரம் ராசநாயகம் (49 வயது) உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யானையின் தாக்குதலினால் உயிரிழந்த குறித்த சடலத்தை மூதூர் நீதவான் எச்.எம்.தஸ்லீம் பௌஸான் பார்வையிட்டதுடன், குறித்து பகுதிக்குள் கிராம மக்கள் சென்று சடலத்தைப் பார்வையிட்டு, தடயங்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் இதனையடுத்து குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

குறித்த சடலத்தை தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளவேளை, இன்று செவ்வாய்க்கிழமை பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சேருவில பொலிஸார் தெரிவித்தனர்.

# அதீத பக்தியால் தெய்வச் சிலையை திருடிய பெண்

## கொத்மலையில் சம்பவம்



கொத்மலை பிரதேசத்திலுள்ள கோயில் ஒன்றில் இருந்த தெய்வச் சிலையை கொள்ளையிட்டு அதனை எடுத்துச் சென்ற பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் இரவு யக்கல பிரதேசத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான 42 வயதான பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். வத்தளையைச் சேர்ந்த சிலர் மலையகத்திற்கு சுற்றுலாப் பயணம் சென்றபோது கொத்மலையிலுள்ள கோயில் ஒன்றுக்கு சென்று வழிபட்டுள்ளனர்.

அப்போது இந்தப் பெண் தெய்வச் சிலையை கொள்ளையிட்டதாக பொலிஸாரிடம் கூறியுள்ளார். கோயிலில் இருந்த தெய்வச் சிலை காணாமல் போயிருப்பதை அவதானித்த கோயிலின் பூசகர் பாதுகாப்பு கெமராக்களை பரிசோதித்துள்ளார்.

அதில் பெண்ணொருவர் அதனை எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து பூசகர் கொத்மலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொத்மலை பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் யக்கல பொலிஸார் தனியார் பஸ் ஒன்றை சோதனையிட்டு, அதில் பயணித்த பெண்ணை, தெய்வச் சிலையுடன் கைதுசெய்துள்ளனர்.

அதீதமான பக்தி காரணமாக வீட்டில் வைத்து பூஜித்து வணங்க தெய்வச் சிலையை எடுத்து வந்ததாக பொலிஸார் நடத்திய விசாரணையின்போது பெண் கூறியுள்ளார். சம்பவம் குறித்து யக்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கைதியின் மனைவியுடன் சேர்ந்து போதைப்பொருள் கடத்திய சார்ஜன்ட்

## அம்பன்பொல பொலிஸாரால் கைது

குருநாகலில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் மனைவியுடன் இணைந்து போதைப் பொருள் விநியோகம் செய்த பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் சார்ஜன்ட் ஒருவரை அம்பன்பொல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரியின் மனைவியுடன் வாகனத்தில் பயணித்தபோதே பொலிஸ் சார்ஜன்ட் கைதுசெய்யப்பட்டுள்ளார். போதைப் பொருள் வியாபாரியின் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர் இரண்டு கிலோ போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட நிலையில், தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளார். கடத்தல்காரர் கைதான பின்னர், அவருக்கு சொந்தமான வாகனம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சார்ஜன்டினால் பயன்படுத்தப் பட்டுள்ளது.

வாகனத்தின் தற்போதைய உரிமையாளர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் சார்ஜன்ட் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சார்ஜன்டிடமிருந்து இரண்டு கிராம் 32 மில்லிகிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பெண்ணிடமிருந்து மூன்று கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ரயில் பாதையில் தொலைபேசி பேசியவருக்கு ஏற்பட்ட நிலைமை

## புகையிரதம் மோதியதில் உயிரிழப்பு

கையடக்கத் தொலைபேசியில் பேசிக்கொண்டு ரயில் பாதையில் பயணித்த யுவதி ஒருவர் ரயில் மோதி உயிரிழந்துள்ளதாக காலி துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாப்பலகம, பரணதனயம்கொட பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதி மாகல்லையிலுள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு வந்து கைத்தொலைபேசியில் உரையாடியபடி ரயில் பாதையில் சென்றுகொண்டிருந்தபோது கொழும்பிலிருந்து பெலியத்த நோக்கிச் சென்ற ருஹுனு குமாரி ரயிலில் மோதி பலத்த காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்

# 2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் முதல் வாசிப்பு நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு காலை 9:30 மணிமுதல் 10:30 மணிவரை ஒதுக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை இன்று காலை 10.30 மணிமுதல் மாலை 5 மணிவரை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இதையடுத்து, அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு நேரத்தில் பிரேரணைக்கு மாலை 5 மணிமுதல் 5.30 மணிவரை நேரம் ஒதுக்கப்பட்டது.

புதன்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 5 மணிவரை நீதி அமைச்சு முன்வைத்த 6 சட்டமூலங்கள் மீது விவாதம் நடத்தவும் குழு தீர்மானித்துள்ளது.

ஒத்திவைப்பு நேரத்தில் கேள்விகளுக்கு மாலை 5 மணிமுதல் 5.30 மணிவரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் காலை 10.30 மணிமுதல் மாலை 5 மணிவரை அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் நடைபெறும்.

அதன் பின்னர், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த ஒத்திவைப்பு நேரத்தில் பிரேரணைக்கு மாலை 5 மணிமுதல் 5.30 மணிவரை நேரம் ஒதுக்கப்பட்டது.

மேலும், எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ள அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

# கைதிகளுக்கு தரமற்ற உணவா? அமைச்சர் விஜயதாச மறுப்பு

சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகளுக்கு தரமற்ற உணவு வழங்கப்படுவதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது - என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

சிறைச்சாலைகளில் மோசடிகள் இடம்பெறுவதோடு, தரமற்ற உணவு வழங்கப்படுவதாகவும் சிறைத்தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

உணவுத் தரம் குறித்து பரிசோதனைகளை மேற்கொள்ளும் தரப்பினரை வெலிக்கடை உள்ளிட்ட சிறைச்சாலைகளுக்கு அனுப்பி பரிசோதனைகளை மேற்கொண்டோம்.

அதுமாத்திரமன்றி நுகர்வோர் விவகார அதிகாரசபை உத்தியோகத்தர்களையும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் சென்று பரிசீலிக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்தேன்.

இரு தரப்பினரும் வழங்கிய அறிக்கையின் பிரகாரம் சிறைக்கைதிகளுக்கு தரமற்ற உணவு வழங்கப்படுவதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என நிரூபிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

# 22ஆவது திருத்தச் சட்டத்தை பெரமுன எதிர்க்கவில்லை!

## சாகர காரியவசம் அறிவிப்பு



நாடாளுமன்றத்தில் இந்த வாரம் விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ள 22ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் சம்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் - என அந்தக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

22ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை பொதுஜன பெரமுன எதிர்ப்பதாக சமூகத்தில் நிலவும் கருத்தில் உண்மையில்லை. திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றன.

அதற்கு இணையாக நாடாளுமன்றத்தின் அதிகாரம் அதிகரிக்கப்படாததையே பொதுஜன பெரமுன எதிர்க்கின்றது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதை பொதுஜன பெரமுன 100இற்கு 200 வீதம் ஏற்றுக்கொள்கிறது.

அதற்கு இணையாக நாடாளுமன்றத்தின் அதிகாரமும் கட்டாயம் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் எனவும் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

22ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் சம்பந்தமான விவாதம் எதிர்வரும் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. கடந்த 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் இந்த திருத்தச்சட்டத்தை விவாதத்திற்கு எடுப்பதற்காக அது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

எனினும், அன்றைய தினங்களில் அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவை பெற்றுக்கொள்வது தொடர்பில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமையால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இம்முறையும் அப்படியான நிலைமை ஏற்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



சீரற்ற காலநிலையின் காரணமாக கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று (17) பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒக்டோபர் 18ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நீதியமைச்சரின் பகற் கனா!

எதை செய்தால் நன்மை தருமோ அதைச் செய்யாமல் எதனால் தீமை வருமோ, நன்மைகள் கிடைக்காதோ, அதையே விரும்பிச் செய்யும் வேலைகளை செய்துகொண்டிருக்கிறது இலங்கை அரசாங்கம். இப்போதைய ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, முன்னர் இருந்த ஆட்சியாளர்களினதும் நிலையும் அதுவே. அந்த வகையில், "கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத வன் வானம் ஏறி வைகுண்டம் போவேன்" என்ற சாரப்பட கருத்துரைத்திருக்கின்றார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

பொறுப்புக் கூறல் விடயத்தில் உள்ளகப் பொறிமுறையின் ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருகின்றோம். அடுத்த மாதம் புலம்பெயர் தமிழ் அமைப் புகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் வெற்றிபெற்றால் இலங்கை விடயத்தில் சர்வதேச தலையீடுகள் இருக்க மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார் .

நீதி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக சர்வதேச நிறுவனங் களின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வேண்டும் என்பதே ஐ.நாவின் நோக்கமாக இருக்கிறது. ஆனால், தேசியப் பொறிமுறையின் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

தேசியப் பொறிமுறையின் ஊடாக சில பெறுபேறுகள் கிடைக் கும் பட்சத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் எனவும் அவர் நம்புகிறார்

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் தானும் அதிபர் ரணிலும் பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும், அடுத்த மாதமும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என்றும், இது வெற்றியடைந்தால், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீடுகளை இல்லாது, இலங்கைக்கு அவை ஆதரவளிக்கும் என்றும் அவர் நம்புகிறார்.

இந்தக் கருத்துக்களைப் பார்க்கும்போது நீதி அமைச்சரும், ஜனாதிபதியும் யதார்த்தங்கள் பற்றிய புரிதல்களின்றி கனவுல கில் சஞ்சரிக்கின்றனரோ என்ற சந்தேகம்தான் மேலெழுகின்றது.

யுத்தப் பேரழிவு நடந்த நாட்டில், அதன்போது இழைக்கப் பட்ட குற்றங்களால் பாதிப்புற்ற தரப்புகளும் மக்களும் இங்கு நீதி, நியாயம் வேண்டி குமுறிக் கொண்டிருக்கும்போது, அவர்களின் மனக்கதவைத் தட்ட சற்றேனும் முயற்சி எடுக்காமல், பேரினவாதத் திமிரோடு நடந்தபடி, மறுபுறத்தில் முகம் தெரியாத சில புலம்பெயர் தரப்புகளுடன் தாம் நடத்தும் தந்திரோபாய காய் நகர்த்தல்கள், யுத்தப் பாதிப்புகளினால் கிளர்ச்சி கொண்டிருக்கும் ஓரினக் குழுமத்தையும், அவர்களை கையாண்டு தாஜா செய்வதன் மூலம் மறுபக்கத்தில் நீதியை நிலைநாட்ட வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் கருத்தியலையும் சமாளிக்கலாம் என்று அவர்கள் பகல் கனவு காண்கின்றனர் என்றே தோன்றுகின்றது.

உள்நாட்டில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் அடிப்படைக் கோரிக்கையான உண்மையைக் கண்டறிதல் விட யத்தில் ஓர் அடி கூட எடுத்து வைக்காத அப்படி நீதி செய்யும் நேர்மையான நோக்கமே கொண்டிராத தென்னிலங்கைப் பேரினவாதம், வைகுண்டம் போவது பற்றி பகல் கனவு காண்கிறது என்பதையே நீதி அமைச்சரின் கருத்துரைப்பு பிரதிபலிக்கிறது.

## இன்றைய நாளில்...

- 1679 – கண்டி அரசனால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் கெப்டன் ரொபர்ட் நொக்ஸ் அங்கிருந்து தப்பி மன்னார் அரிப்பு என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார்.
- 1922 – பி.பி.சி. வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 1929 – கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டபூர்வமாக எழுதப்பட்டது.
- 1954 – அமெரிக்காவின் டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனம் முதலாவது டிரான்சிஸ்டர் வானொலியை அறிமுகப்படுத்தியது.
- 1963 – விண்வெளிக்குச் சென்ற முதலாவது பூனை என்ற பெயரை பெலிசேட் பெற்றது.
- 1967 – சோவியத் விண்கலம் வெனேரா-4 வெள்ளிக் கோளை அடைந்தது. வேறொரு கோளின் வளிமண்டலத்தை அளந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1991 – தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் அமைக்கப்பட்டது.
- 2004 – சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரால் கொல்லப்பட்டார்.
- 2006 – காலி கடற்படைத்தளத்தில் கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் பல கடற்படைக் கலங்கள் அழிக்கப்பட்டன.

## நக்கல் நமசிவாயம்




# நடைமுறைக்கு வராத திருமலை இந்திய எண்ணெய்க் குத ஒப்பந்தம்!



உதய கம்மன்பில



ஆனந்த பாலித



சட்டத்தரணி சுனில் வட்டகல

## எரிபொருள் பற்றாக்குறையில் இலங்கை

பெற்றோலியத்துக்கு எட்டப்படும் தேவைப்பாடு, பெற்றோலியத்தை இறக்குமதி செய்வது மற்றும் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்துவது சம்பந்தமான ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றை மேற்கொள்வது மற்றும் இவ்வாறானதொரு திட்டத்தை பொறுப்பற்ற ஒரு நிறுவனம் கையாள்கையில் ஊழல் மோசடிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும் 2021 கோப் அறிக்கை சுட்டிக்காட்டியது

மேலும், எதிர்காலத்தில் பெற்றோல், டீசல், விமான எரிபொருள் மற்றும் மண்ணெண் ணெய்க்கான கேள்வி வெகுவாக அதிகரிக்கக்கூடும் என்பதால் நாட்டின் பெற்றோலிய களஞ்சியப் படுத்தலின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியதன் தேவையும் அதற்கான திட்டம் தொடர்பாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கையானது கவனம் செலுத்தி, அதற்கான திட்டங்களை வழங்கியிருந்தது.

குறித்த அறிக்கையில்,

பெற்றோலியம் களஞ்சியப்படுத்தும் முறைகளாக சப்புகஸ்கந்த மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள பெற்றோலியக் களஞ்சியத் தொகுதிகள் தவிர்ந்த ஏனைய எண்ணெய்க் குதங்கள் இலங்கைப் பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி கம்பெனியால் நிர்வகிக்கப்படுதல், இன்று வரை டீசல் களஞ்சியக் கொள்ளளவானது 48 நாட்களுக்குப் போதுமானதாக தக்கவைத்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் விருத்தி செய்யப்பட்டிருந்தல், பெற்றோல் களஞ்சியக் கொள்ளளவானது 30 நாட்களுக்குப் போதுமானதாக தக்கவைத் துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் விருத்தி செய்யப்பட்டிருத்தல், மெட்ரிக் தொன் 15,000 கொள்ளளவுடைய 3 குதங்கள் அமைக்கப்பட்டிருத்தல், மெட்ரிக் தொன் 10,000 கொள்ளளவுடைய 03 குதங்கள் பழுதுபார்க்கப்பட்டிருத்தல், கொலன்னாவையில் 09 புதிய எண்ணெய்க் குதங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் 3,000 கியூபிக் (கன) மீற்றர் களஞ்சியக் கொள்ளளவு கிடைத்துள்ளமை, முத்துராஜவெல பிரதேசத்தில் புதிய எண்ணெய் குதத் தொகுதி அமைக்கப்படுதல், நிறுவனத்தின் உள்ளக பொறியியலாளர்களின் அபிப்பிராயத்தின் படி எமது நாட்டில் நிலவும் பெற்றோலியத் தேவைக்காக 45 நாட்களுக்கும் 60 நாட்களுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்திற்கு களஞ்சிய வசதிகளை கொண்டிருக்க வேண்டும் போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலை எண்ணெய்த் தாங்கி அபிவிருத்தி செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதற்காக ஜனவரி மாதம் ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டது.

திறைசேரி செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், கனியவள கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. மற்றும் திருகோணமலை பெற்றோலியம் டெர்மினல்ஸ் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனி னும், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 9 மாதங்களா கியுள்ள நிலையில், எந்த அபிவிருத்தி நடவடிக்கை யும் இதுவரை நிறைவடையவில்லை.

இந்த நடவடிக்கைகளின் தாமதம் குறித்து ஐக்கிய கூட்டு தொழிற்சங்க சக்தியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலிதவிடம் வினவினோம்,

ஜனவரி 6 ஆம் திகதி இந்த திட்டம் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டது. எனினும், திருகோணமலை எரிபொருள் களஞ்சியசாலையில் இதுவரை எந்த செயற்பாடுகளும் நடைபெற வில்லை. அந்த பணிகளை மேற்கொள்ள தனியாக குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இருப்பினும், எந்தவொரு செயற்பாடுகளும் நடைபெறவில்லை என ஆனந்த பாலித தெரிவித்தார்.

இவற்றில் 24 எண்ணெய்த் தாங்கிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) உரிமை கொண்டவை. எனினும், அந்த தாங்கிகளுக்குரிய எந்தவொரு செயற்பாட்டையும் இதுவரை காணவில்லை. 10 மில்லியன் டொலர் செலவாகும் இதனை அவசரமாக முடிக்கலாம் என்று அரசு கூறியிருந்தது. என்றாலும் செயற்பாடற்று காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

IOC இடமிருந்து எரிபொருள் கொள் வனவு செய்யப்பட்ட போது பவுசர் மூலம் விநியோகம் நடைபெற்றது. எனவே, இங்கு போக்குவரத்திற்கு மாத் திரமே கோடிக்கணக்கான ரூபா செலவை மேற்கொண்டனர். IOC இன் Upper Tank Farm இல்தான் CPC இன் தாங்கிகள் இருக்கின்றன. அதிலும் எந்தவித செயற்பாடுகளும் நடைபெறவில்லை. அத்தோடு எஞ்சிய 61 தாங்கிகள் அதிலும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை இடம்பெறவில்லை. இருந்தாலும் IOC அவர்களது உலக வர்த்தகத்தை மேற்கொண்டுதான் இருப்பதாக பாலித சுட்டிக்காட்டினார்.

அதாவது, 2003ஆம் ஆண்டு இலங்கை-இந்தியாவுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU-Memorandum of Understanding ) ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஆறு மாதங்களுக்காக மட்டும் கைச்சாத்திடப்பட்டது. எனினும், குறித்த காலப்பகுதியில் மீள் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. அந்த ஆறு மாத நம்பிக்கை ஒப்பந்தத்தில் வருடமொன்றுக்கு ஒரு எண்ணெய்த் தாங்கிக்கு 1000 டொலர் செலுத்த

**2022 ஆம் ஆண்டு ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பயங்கரமான விடயம் என்னவென்றால் 30 வருடங்களுக்கு மேற்கொள்ளப்படவிருந்த ஒப்பந்தம் 50 வருடங்களாக அதிகரிக்கப்பட்டதுதான். குறிப்பிட்ட 2022 ஒப்பந்தத்தின் முன்னரான காலப்பகுதியில் IOC எந்தவித ஒப்பந்தமும் இல்லாமலே செயற்பட்டது. குறிப்பாக எந்தவொரு இடத்திலும் IOC களஞ்சியப்படுத்தி வைக்கும் எரிபொருளை நாட்டினுள் விநியோகம் செய்ய வேண்டும் என்ற எந்தவொரு ஒப்பந்தமும் இருக்கவில்லை. இந்தக் களஞ்சிய நிலையங்கள் IOC இன் ஏற்றுமதி - இறக்குமதிக்கான சேமிப்பு நிலையங்களாகவே காணப்பட்டன.**

வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது ஒப்பந்தத்துக்கு செல்வதாயின் இந்த ஒழுங்குமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கடந்த 2018, 2019 இல் அரசாங்கம் இந்தியாவுடன் ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ள இருந்தது. அந்த ஒப்பந்தத்தில், 11 எண்ணெய்த் தாங்கிகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு கொடுத்து விட்டு எஞ்சிய தாங்கிகளை இரண்டு பக்கங்களும் இணைந்து 99 வருட குத்தகை அடிப்படையிலான ஒப்பந்தமாக இருந்தது. அது மஹிந்த அமரவீர காலத்தில் தடைப்பட்டது. பின்னர் அர்ஜுன ரணதுங்க காலத்திலும் சென்று தடைப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பயங்கரமான விடயம் என்னவென்றால் 30 வருடங்களுக்கு மேற்கொள்ளப்படவிருந்த ஒப்பந்தம் 50 வருடங்களாக அதிகரிக்கப்பட்டதுதான். குறிப்பிட்ட 2022 ஒப்பந்தத்தின் முன்னரான காலப்பகுதியில் IOC எந்தவித ஒப்பந்தமும் இல்லாமலே செயற்பட்டது. குறிப்பாக எந்தவொரு இடத்திலும் IOC களஞ்சியப்படுத்தி வைக்கும் எரிபொருளை நாட்டினுள் விநியோகம் செய்ய வேண்டும் என்ற எந்தவொரு ஒப்பந்தமும் இருக்கவில்லை. இந்தக் களஞ்சிய நிலையங்கள் IOC இன் ஏற்றுமதி - இறக்குமதிக்கான சேமிப்பு நிலையங்களா கவே காணப்பட்டன. 2003 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் தஹம் விமலசேன கடிதம் ஒன்றின் மூலம் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் 5 வீதத்தை விநியோகிக்குமாறு தெரிவித்திருந்தார்.

2002 ஒப்பந்தத்தின் படி CPC இன் முத்துராஜவல, கொலன்னாவ உற்பட 11 பிரதேச சேமிப்பு நிலையங்களின் 33 வீதமான உரிமை 35 வருடங்களுக்கு IOC க்கு வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறே 2002 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் படி குறிப்பிடத்தக்க பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. குறிப்பாக இறக்குமதி, ஏற்றுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டாலும் நாட்டினுள் விநியோகம் செய்ய ஒப்பந்தம் செய்யப்படவில்லை. மேலும், சீனக்குடா ( China Bay ) பகுதி இந்த ஒப்பந்தத்துக்கு உட்படவில்லை.

மேலும், 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தத் தின்படி, வேறு எந்த ஒரு நிறுவனமும் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒப்பந்தங்கள் செய்ய முடியாது, CPC க்கு வழங்கப்பட்ட குதங்களை அவர்களால் புனர்நிர்மாணம் செய்ய முடியாது ஏனெனில், அது கூட்டு உடன்படிக்கையில் உள்ளது. அதன் அதிகாரம் LIOC வசம் நேரடியாகவே செல்லும். ஆக மொத்தம் குறிப்பிட்ட 2022 ஒப்பந்தத்தின் 100 வீத நோக்கமானது 710 ஏக்கர் காணி உட்பட 99 தாங்கிகளையும் IOC க்கு வழங்குவதாகும் என்பதில் சந்தேகமில்லை.

முன்னர் முத்துராஜவெல,கொலன்னாவ என 11 மொத்த நிலையங்களுக்கும் சேர்த்து மாதம் ஒன்றிற்கு சாதாரணமாக 8 அல்லது 9 கப்பல்களின் மூலம் எரிபொருள் கொண்டுவரப்பட்டன. அண்ணளவாக ஒரு கப்பல் 36,000 மெட்ரிக் தொன் கொண்டது. இது போக கச்சா எண்ணெய் கப்பல் 90,000 மெட்ரிக் தொன் கொண்ட இரண்டு கப்பல்கள் கொண்டு வரப்பட்டன. இன்றைய நிலையில் இவை எதுவும் இல்லை. இன்று ஒரு மாதத்திற்கு அண்ணளவாக 4 கப்பல்களே வருகின்றன. முன்னர் கொண்டுவரப்பட்ட எரிபொருளை விட இப்போது கொண்டு வரப்படும் எரிபொருள் அண்ணளவாக 35 வீதமாகவே உள்ளது. குறிப்பாக இந்த 35 வீதத்தில் டீசல், பெற்றோல் மாத்திரமே உள்ளடங்குகின்றன.

மற்றையவை இன்னும் குறைவாகவே உள்ளன.

சீனக்குடா (China Bay) பகுதி மொத்தமாக IOC க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக சீனக்குடா (China Bay) மூலம் எமது கப்பல் ஒன்று சென்றால் நாங்கள் IOC க்கு பணம் செலுத்த வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். மேலும், இந்த ஒப்பந்தத்தில் எந்த எரிபொருளுக்கும் தடையோ, நிபந்தனைகளோ விதிக்கப்படவில்லை. எனவே, இந்தியாவின் அனுமதியின்றி எதுவும் செய்ய முடியாது. இதன் காரணமாகவே IOC இன் எந்த ஒரு செயற்பாட்டுக்கும் இந்தியாவின் தூதுவர் தலையிடுகிறார் என ஆனந்த பாலித தெரிவித்தார்.

இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 9 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அதன் செயற்பாடுகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இது தொடர்பில் முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் நாம் வினவினோம்,

நான் ஜனவரி மாதத்தில் குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டேன். இருப்பினும், குறிப்பிட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரே மாதத்தில் அமைச்சுப்பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். இருப்பினும், நான் அறிந்த வகையில் தாங்கிகள் புனர் நிர்மாணப்பணியில் இருக்கின்றன. நீண்ட காலமாக பாவிக்காததால் அவற்றை பாரியளவில் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளது.

திருகோணமலை பெற்றோலியம் டெர்மினல்ஸ் (Trinco Petrolium Terminal) எனும் நிறுவனத் தினாலேயே திருகோணமலை எண்ணைக் குதங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. 2022இல் இடப்பட்ட ஒப்பந்தம் ஒரு கூட்டு ஒப்பந்தம் என்பதால் CPC க்கு 51 வீதம், LIOC க்கு 49 வீதம் என்ற அடிப்படையில் முதலிடும் நோக்கிலேயே கைச்சாத்திடப்பட்டது. இதற்கான முதலீடு 31 மில்லியன் டொலர்களாகும். ஆனால், அது முழுமையாக கிடைக்கப் பெற்றதா என்று எந்த தகவலும் தெரியாது என முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு கொடுத்தமை தொடர்பில் அதனை இரத்துச் செய்யக் கோரி தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் வாகமுல்ல உதித்த தேரர், சட்டத்தரணி சுனில் வட்டகல ஊடாக கடந்த ஜனவரி 7 ஆம் திகதி இந்த அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பில் சட்டத்தரணி சுனில் வட்டகலவிடம் நாம் வினவினோம்,

இந்த செயற்பாடு அரசியலமைப்புக்கு முரணாக உள்ளது. வழக்கு இதுவரை ஆரம்ப கட்டத்திலேயே இருக்கின்றது. எவ்வித முன்னேற்றமும் இல்லை. அமைச்சரவை மாற்றத்தைக் காரணம் காட்டி வழக்கை மேலும் பின்தள்ளி போடுகின்ற நிலையில் இருப்பதாக சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவின் (கோப்)அறிக்கையில் முறையான திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தும் ஏன் அரசாங்கம் அதனை செயற்படுத்தவில்லை என்ற கேள்வியை எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கேட்டபோது அதற்கான பதில் கிடைக்கவில்லை. மேலும், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதம் குறித்துக் கேட்டறிய லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தாவை தொடர்பு கொண்டோம். எனினும், பதில் கிடைக்கவில்லை.

**அப்ரா அன்சார்**

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 17.10.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 111 4 00 | 122 2514 |
| கனேடியன் டொலர் | 147 421 | 16 2654 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38,0106 | 41 103 |
| யூரோ | 237 54 4 | 252 3 43 |
| ஜப்பான் யென் | 1 3 62 | 1 40 |
| சிங்கப்பூர் டொலர் | 140 026 | 150 51 1 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 1 6281 | 307 4101 |
| சுவிஸ் பிரான்ங் | 244 73 8 | 262 1168 |
| ஐ.அ.டொலர் | 25 2437 | 26 7526 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 8038 |
| குவைட் | குவைட் தினார் | 0,06 7605 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 7 63 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,6706 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6 68 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 82 0 |

# நாட்டுக்கான கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் வெற்றியடையும்

## ஜனாதிபதி ரணில் சியம்பலாண்டுவவில் தெரிவிப்பு

## சீன நிதி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு



நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன நிதியமைச்சருடன் அண்மையில் கலந்துரையாடியதாகவும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வொஷிங்டன் சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் தலைமையிலான குழுவினர், சர்வதேச நாணய நிதியம் மற்றும் சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று முக்கிய நாடுகளுடன் நேற்று ஆரம்பகட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பான பிரச்சினையை விரைவில் தீர்க்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யவும் அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (16) காலை சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவில் ரத்துமட, வீரகந்தவல ஆகிய பிரதேசங்களுக்கு அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பயிர்ச்செய்கைகளை நேரில் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் குறித்தும் அரச அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

விவாதம் செய்வதில் தமக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாதென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். வீதிக்கு வந்து இரத்தம் சிந்தப் போவதாக சிலர் கூறியதை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்த அவர், இரத்தம் சிந்துவதற்கு முன் வாழ வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மக்களுக்கு உணவு வழங்கும் முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாவிட்டால் இரத்தம் சிந்துவதற்கன்றி பட்டினியில் சாகவே நேரிடும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் மாத்திரமே அரசியல் பேசப்பட வேண்டும் எனவும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

சியம்பலாண்டுவ, ரத்துமட மற்றும் வீரகந்தவல ஆகிய பிரதேசங்களைச் சூழவுள்ள பகுதிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்நிலங்களுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, விவசாயிகளுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். இதன்போது தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாக முன்வைக்கும் சந்தர்ப்பம் விவசாயிகளுக்குக் கிடைத்தது. உரம், கிருமிநாசினி, களைக்கொல்லிகளின் பற்றாக்குறை, காணிப் பிரச்சினை, நீர்ப் பிரச்சினை, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் போன்றவை தொடர்பிலும் விவசாயிகள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளை விவசாய நிலத்திற்கு அழைத்த ஜனாதிபதி, விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை இங்கு விசேட அம்சமாகும். தமது பிரதேசத்திற்கு ஜனாதிபதி ஒருவர் வருகை தந்தது இதுவே முதற்தடவை என்று குறிப்பிட்ட விவசாயிகள், தங்களுக்கு அருகில் வந்து பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் ஜனாதிபதி செயலக அதிகாரி ஊடாக பதிவு செய்துகொண்ட ஜனாதிபதி, இதற்கென தனியான மேலதிகச் செயலாளர் ஒருவரை ஜனாதிபதி அலுவலகத்தில் நியமித்து, முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இதுதவிர, பிரதேச மக்கள் எதிர்நோக்கும் கல்வி, வீதி, வீடமைப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன.

அந்த அனைத்துப் பிரச்சினைகளையும் செவிமடுத்த ஜனாதிபதி, பல சிரமங்களுக்கு மத்தியில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதேச மாணவர்களை பல்கலைக்கழகக் கல்வி வரை அழைத்துச் செல்வதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவதாகத் தெரிவித்தார்.

# இராஜதந்திர சம்பிரதாயங்கள் குறித்து பொலிஸாருக்கு விசேட விளக்கமளிப்பு

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஏற்பாடு

தமது உத்தியோகபூர்வக் கடமைகளை எளிதாக்குவதற்கான இராஜதந்திர சம்பிரதாயங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த ஒரு நாள் விளக்க அமர்வை இலங்கை பொலிஸின் 30 சிரேஷ்ட அதிகாரிகள் குழுவிற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெற்றிகரமாக நடத்தியது. இந்த அமர்வு அமைச்சின் வளாகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

வியன்னா சாசனம் மற்றும் இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின்படி சர்வதேச நெறிமுறைகள், நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் உள்வரும் வெளிநாட்டுப் பிரமுகர்களின் விஜயங்களை ஒழுங்குபடுத்தும் முறைகள் உட்பட பல ஊடாடும் அமர்வுகளை இந்தத் திட்டம் கொண்டிருந்தது.

இராஜதந்திர வாழ்க்கையில் நிபுணத்துவம் மற்றும் விரிவான அனுபவமுள்ள அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அமைச்சின் சட்ட உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவின் சார்பில் மேலதிக செயலாளர் கலாநிதி ஏ.எஸ்.யு.மெண்டிஸ் ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

## போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவர் யாழில் கைது

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் மின் சாதன விற்பனையாளர்கள் போன்று நடமாடி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கல்வியங்காட்டு பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றத்தில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். குறித்த நபரின் வாக்கு மூலத்தின் அடிப் படையில் மேலும் சில நபர்கள் கல்வியங்காடு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர் என பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் கல்வியங்காட்டுப் பகுதி யில் பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை மோட்டார்சைக்கிளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பெட்டி ஒன்றுடன் பயணித்த இருவரை பொலிஸார் வழிமறித்து சோதனை செய்தனர்.

அதன்போது குறித்த பெட்டியினுள், மின் குமிழ்கள் உள்ளிட்ட மின் சாதனப் பொருட்கள் காணப்பட்டன. அவற்றுக்குள் 120இற்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளை மறைத்து வைத்திருந்த நிலையில் அவை மீட்கப்பட்டன.

அதனையடுத்து மோட்டாசைக்கிளில் வந்த சுன்னாகம் மற்றும் கல்வியங்காடு பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்களையும் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய அரபு தூதுவருடன் சந்திப்பு



இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் கலிட் நஸார் அல்-அமேரியை சமீபத்தில் தூதரகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் அதில் பிரதானமாக இளைஞர்கள் முகங்கொடுக்கும் சவால்கள், மேலும் இளைஞர் களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள், இளைஞர்களின் அரசியல் துறை உட்பட துறைசார் வகிபாகங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

மேலும், இக்கலந்துரையாடலின்போது ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் குறிப்பிடுகையில்;

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கையின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைக்கின்ற வகையில் இளைஞர் திறன் பரிமாற்றுத்திட்டம் ஒன்றை நடத்த விரும்புவதாக தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இளைஞர் நாடாளுமன்ற பிரதமர் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடைய தலைவர் ஆகியோரை சந்தித்து இக்கலந்துரையாடல் பற்றி கூறியதோடு இளைஞர் அமைச்சின் ஊடாக இச்செயற்பாட்டை எதிர்காலத்தில் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

அத்தோடு இச்சந்திப்பின் விசேட அம்சமாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவருக்கு 'வியாபாரம் தொடர்பாக புராதன ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கான வருகை' என்பதை சித்திரிக்கும் வகையில் நினைவுச்சின்னம் ஒன்று வழங்கப்பட்டது.

# வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கஜகஸ்தானில் பல்வேறு மட்டப் பேச்சு




கஜகஸ்தானில் நடைபெற்ற ஆசியாவில் ஊடாடல் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் ஆறாவது உச்சிமாநாட்டிற்கான இலங்கைத் தூதுக்குழுவிற்கு தலைமைதாங்கிய வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, உச்சிமாநாட்டின் பக்க அம்சமாக, அஸர்பைஜான் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஹுன் பைரமோவ் மற்றும் கஜகஸ்தான் குடியரசின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அடில் துர்சுனோவ் ஆகியோருடன் சந்திப்புகளில் ஈடுபட்டார்.

கஜகஸ்தானின் வெளிவிவகார பிரதி அமைச்சருடனான சந்திப்பின்போது, இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, ஆசியாவில் ஊடாடல் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் ஆறாவது உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியமைக்காக கஜகஸ்தானுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் உறவுகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும் இருதரப்பு ஆலோசனைகள் கடைசியாக ஒரு தசாப்தத்திற்கு முன்னர் நடத்தப்பட்டமையை சுட்டிக்காட்டி, குறித்த ஆலோசனைகளை நடத்துவதற்கு இது சரியான தருணமாகும் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையில் மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறைகளில் ஒத்துழைப்பதற்கான வழிகளை ஆராயுமாறும் இராஜாங்க அமைச்சர் பாலசூரிய கஜகஸ்தானிடம் கோரிக்கை விடுத்தார்.

ஆசியாவில் ஊடாடல் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் ஆறாவது உச்சிமாநாட்டில் வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் பங்கேற்பைப் பாராட்டிய வெளிவிவகார பிரதி அமைச்சர், கஜகஸ்தான் ஆற்றல் துறையில் இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்தார். பொருளாதாரம், கலாசாரம் மற்றும் அரசியல் உறவுகள் தொடர்பான மெய்நிகர் இருதரப்பு ஆலோசனைகளை முன்னோடியாக நடத்தலாம் என்றும், இராஜாங்க அமைச்சர் பாலசூரியவை 2023இல் கஜகஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறும் பிரதி வெளிவிவகார அமைச்சர் துர்சுனோவ் அழைப்பு விடுத்தார்.

அஸர்பைஜான் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஹுன் பைரமோவ் உடனான சந்திப்பின்போது, இராஜாங்க அமைச்சர் பாலசூரிய இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து அவருக்கு விளக்கமளித்தார். ஆற்றல் மற்றும் சக்தித் துறையில் உறவுகளை விரிவுபடுத்துவது குறித்தும் கலந்துரையாடல்களின்போது கவனம் செலுத்தப்பட்டது.

அஸர்பைஜான் எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடாக இருப்பதால், பெற்றோலியத் துறையை தாராளமயமாக்கும் இலங்கையின் முயற்சிகள் குறித்து கவனத்தை ஈர்த்த இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளின் நிறுவனங்களுக்கு எரிபொருள் இறக்குமதி மற்றும் சில்லறை விற்பனைச் சந்தையைத் திறப்பதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். இரு தரப்பும் மேலும் ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடரவும், தற்போதுள்ள உறவுகளை விரிவுபடுத்துவதற்காக இருதரப்பு ஆலோசனைப் பொறிமுறையை நிறுவவும் ஒப்புக்கொண்டன.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, கஜகஸ்தானில் உள்ள இலங்கைக்கான தூதுவர் யெர்ஷான் ஏ.அகதாயேவுடன் இலங்கைக்கும் கஜகஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவதற்கான புதிய வழிகள் குறித்து கலந்துரையாடினார்.

இராஜாங்க அமைச்சரின் பதில் மேலதிகச் செயலாளரும் பொது இராஜாங்க செயலாளருமான சித்தாரா கான் இந்த சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் பாலசூரியவுடன் இணைந்திருந்தார்.

# இன ஐக்கியத்திற்கு வித்திடும் 'பாலம்' சஞ்சிகை வெளியீடு



(கண்டி செய்தியாளர்)

மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களின் இளைஞர் பங்கேற்புத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 'பாலம்' என்ற சஞ்சிகையின் வெளியீட்டு விழா கண்டி, பொல்கொல்லை தேசிய கூட்டுறவு கல்வி நிறுவன கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

'சைபில்ட் கெயார் பாத் லங்கா' நிறுவனத்தின் தலைவர் காமினி ரத்ன திஸ்ஸ தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது.

இன ஐக்கியத்திற்கு வித்திடும் மேற்படி செயற்றிட்டத்திற்கான அனுசரணையை வழங்கும் 'எல்விட்டாஸ்' நிறுவனத்தின் கண்டி மாவட்ட இணைப்பாளர் ரமேஸ் குமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் முதற் பிரதியை 'சைபில்ட் கெயார் பாத் லங்கா' நிறுவனத்தின் தலைவர் காமினி ரத்ன திஸ்ஸவிடமிருந்து ரமேஸ் குமார் பெற்றுக்கொண்டதுடன் சிறப்புப் பிரதியை



கல்ஹின்ன மத்ரசதுல் பலாஹ் அரபிக் கல்லூரி விரிவுரையாளர் மௌலவி எம்.எஸ்.எம்.மிர்சாத் பெற்றுக்கொண்டார்.

# நாவலப்பிட்டி ஆர்ப்பாட்டத்தில் கைதான 15 பேரும் சரீரப் பிணையில் விடுவிப்பு




(க.கிஷாந்தன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாவலப் பிட்டி நகரில் நேற்று முன்தினம் (16) ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்த குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சசங்க சம்பத் சஞ்சீவ உள்ளிட்ட 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இரவு நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதமான சரீரப் பிணையில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நாவலப்பிட்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு தொகுதியினர் நேற்று முன்தினம் நாவலப்பிட்டி நகரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியி ருந்தனர்.

போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தபோதிலும், அதனையும் பொருட்படுத்தாது போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் இந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக் காலங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களென்ற சந்தேகத்தில் ஐவர் ஹட்டனில் கைது

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)



தீபாவளி பண்டிகைக் காலங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் எனக்கூறி சந்தேகத்தின் பேரில் ஐந்து பெண்கள் அடங்கிய குழுவை ஹட்டன் பொலிஸார் நேற்று (17) காலை கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது,

நேற்றுக் காலை ஹட்டனில் இருந்து பொகவந்தலாவைக்கு சென்ற பஸ்ஸொன்றில் சந்தேகத்திற்கிடமாக பெண்கள் மூவர் இருந்ததையடுத்து ஹட்டன் பொலிஸாருக்கு அறிவித்ததன் பின்னர் குறித்த பெண்கள் உட்பட ஐந்து பெண்களை சந்தேகத்தின் பேரில் ஹட்டன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பெண்கள் ஐவரும் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள இடங்களில் பல்வேறு திருட்டுச்சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் என சந்தேகிப்பதாக ஹட்டன் பொலிஸார் தெரிவிக்கின்றனர். திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் நேர்த்தியாக ஆடை அணிந்துள்ள குறித்த பெண்கள் தம்மை எவரேனும் சந்தேகம் கொள்ளாதவாறு நடந்துகொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்களின் பைகளை சோதனையிட்ட போது அதில் பல பணமீட்பு வங்கி அட்டைகள், அடையாள அட்டைகள் என்பன இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். மேற்படி கைதுசெய்யயப்பட்டுள்ள பெண்களை ஹட்டன் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக்காலங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது வழமையாகிவிட்ட நிலையில், குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் நகைகள் பணப்பைகள் போன்றவற்றைத் தாமே பாதுகாத்துக் கொள்வது அவசியம் எனவும் ஹட்டன் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக ஹட்டன் பொலிஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் சிவில் உடைகளில் பலர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த பண்டிகைக் காலங்களில் இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 14 பேரை ஹட்டன் பொலிஸார் கைதுசெய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தொடர் மழையால் களுகங்கையின் நீர்மட்டம் உயர்வு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தின் பல இடங்களில் மழை தொடர்ந்து பெய்து வருவதால் களுகங்கையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இரத்தினபுரி காரியாலய அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

களுகங்கையின் கிளை ஆறுகள் உள்ள ஏந்து பிரதேசங்களிலும் மழை தொடர்வதால் களுகங்கையின் நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து காணப்படுவதாகவும் குறிப்பாக இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களின் களுகங்கையின் எல்லைப்பகுதியான மில்லகந்த பகுதியில் நேற்று 7 அடி 8 அங்குலத்தில் நீர் உயர்ந்து காணப்பட்டதாகவும் இந்நிலைமை சாதாரண வெள்ள நிலைமை ஏற்படுவதற்கான அறிகுறி எனவும் இந்நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிவனொளிபாத மலை அடிவாரம் மற்றும் பலாபத்தல கிலீமலை பிரதேசங்களில் மழை பெய்தால் இரத்தினபுரி பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியவர்கள் மொட்டுக்கட்சியை மேம்படுத்தத் தடுமாற்றம்

## நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் அங்கலாய்ப்பு

“நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில் மொட்டுக் கட்சியை கட்டியெழுப்ப தட்டுத் தடுமாறுகின்றனர்” என புசல்லாவை நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“எமது நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமை இயற்கையாக ஏற்பட்டதல்ல. நாட்டிற்கு தலைமை தாங்கியவர்களால் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளாலும் தவறான வழிமுறைகளாலும் ஏற்பட்டதாகும். இந்நிலைமையில் இருந்து மீண்டு வருவதற்கு இன்னும் பல வருடங்கள் எடுக்கும் என கூறப்படுகின்றது. அதற்கும் நாம் பல தியாகங்களோடு செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பதிலாக மொட்டுக்கட்சியை கட்டியெழுப்புவதற்கு தட்டுத் தடுமாறுவது வேடிக்கையாக உள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு யார் காரணமென அனைவருக்கும் தெரியும். கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே இதற்கு பொறுப்பு கூற வேண்டும். ராஜபக்ஷக்களும் அவர்களது சகாக்களும் இதன் பின்னணியில் உள்ளார். கோட்டாபய அரசாங்கம் ஒன்றன்பின் ஒன்றதாக பல பிழையான தீர்மானங்களை எடுத்தது. அதன்போது நாட்டு மக்கள் பல்வேறு வழிகளிலும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதனால் ஏற்படப்போகும் பாதிப்புகளை சுட்டிக்காட்டினர். மக்கள் எதிர்ப்புகளையோ, போராட்டங்களையோ, புத்திஜீவிகளின் கருத்துகளையோ அன்றைய அரசாங்கம் செவிமடுக்கவில்லை.

தன்னிச்சையாகவும், தான்தோன்றித்தனமாகவும் முடிவுகளை எடுத்தது. அதனது விளைவையே நாங்கள் சந்தித்துக்கொண்டு இருக்கின்றோம். மக்கள் பட்டினி நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டு மக்களை பட்டினி நிலைக்கு தள்ளிவிட்டு மொட்டுக் கட்சியினர் பேரணி நடத்துகின்றனர். மீண்டும் ராஜபக்ஷக்களை ஆட்சிக் கதிரையில் அமர்த்துவோம் என சூளுரைக்கின்றனர். இதில் இருந்து நாம் ஒன்றை தெளிவாக புரிந்துகொள்ள முடியும், நெருக்கடிகளில் சிக்கித் தவிப்பது நாட்டு மக்கள் மட்டுமே.

ராஜபக்ஷக்களுக்கு அது ஒரு பொருட்டல்ல. அதனைப் புரிந்துகொள்ளவும் அவர்கள் தயாராக இல்லை. தாம் செய்த பிழைகளை உணரவும் அவர்கள் தயாராக இல்லை. மாறாக, ஆட்சி பலத்தை அடைவதே அவர்களது தேவை. இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இனியாவது இந்த நாட்டை உண்மையாக கட்டியெழுப்பக் கூடியவர்களை இனங்காண வேண்டும். அவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும். அதேவேளையில் நாட்டை கட்டியெழுப் புவதாயின் அரசாட்சியில் ராஜபக்ஷக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்” என்று தெரிவித்தார்.

# விசுவமடு கல்விசார் அறுவடை போற்றல் விழா






விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையம் நடத்திய அறுவடை போற்றல் விழா கடந்த சனிக்கிழமை மாலை விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட விஞ்ஞானத்துறைக்காகவும் 20இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலை மற்றும் வணிகத்துறைக்காகவும் விசுவமடு பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியமையை கௌரவிக்கும் முகமாகவும் தற்போது கற்கும் மாணவர்களுக்கு ஊக்கம் வழங்கும் முகமாகவும் இந்த விழா நடத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா கலந்துகொண்டார்

சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரும் கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி நிலையத் தலைவருமாகிய மருத்துவர் த.சத்தியமூர்த்தி, பிரபல உயிரியல் ஆசான் வ.சி.குணசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்

கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான.ஆதவன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்டனர்.

கல்வி நிலையம் தொடர்பான நோக்க உரையை நிறுவனத்தை நெறிப்படுத்திவரும் பொறியியலாளர் பொ.கெங்கேஸ்வரன் ஆற்றினார்.

மாணவர்களிடையே கல்வித் திறமை மற்றும் கலைத் திறமை சார்ந்த அடிப்படையில் சிவகுமார் கருஷா என்ற மாணவி சாதனை மாணவி என்ற விருதையும் 25,000 ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். துணைவேந்தர் மாணவிக்கான கௌரவத்தை மேற்கொண்டார்.

# மோட்டார் சைக்கிள் உள்ளிட்டவற்றை அடகுபிடித்து போதைப்பொருள் விற்பனை; யாழில் மூவர் கைது

(யாழ். நிருபர்)



போதைப்பொருள் வாங்க வருவோரிடம் பணம் இல்லாதபோது அவர்களின் மோட்டார் சைக்கிள்கள், கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை அடகு பிடித்து எடுத்துக்கொண்டு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட போதை வியாபாரிகள் எனும் சந்தேகத்தில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியில் போதை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தொடர்பிலான இரகசியத் தகவல் மாவட்ட குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றமையை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த புலனாய்வுப் பிரிவினர் மூன்று சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 2 கிராம் 270 மில்லி கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அவர்களிடம் போதைப் பொருளை வாங்க வருவோர் பணப் பற்றாக்குறை ஏற்பட்டால், தமது கையடக்கத் தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை அடகாக வைத்து போதைப்பொருளை வாங்கிச் செல்வார்கள் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் போதைப்பொருள் வாங்குவதற்காக சந்தேக நபர்களிடம் அடகாக ஒப்படைக்கப்பட்ட 07 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சுமார் 08 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன ரக மோட்டார் சைக்கிள் என்பனவும், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஏழாலையில் போதை மாத்திரைகளுடன் மூவர் கைது

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியில் போதை மாத்திரைகளுடன் மூவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த மூவரும் கைதுசெய் யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 296 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட மூவரும் மேலதிக நடவடிக்கைக்காக இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த மூவரும் போதைப்பொருள் விற்பனை முகவர்கள் என தாம் சந்தேகிப்பதாகவும், மூவரிடமும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

# மீசாலையில் தனிமையில் இருந்த மூதாட்டியை தாக்கி 10 பவுண் நகை - பணம் திருட்டு

(சாவகச்சேரி நிருபர்)


சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை ஐயா கடைச் சந்திப் பகுதியைச் சேர்ந்த வீடொன்றில் நேற்று முன்தினம் (16) அதிகாலை வேளையில் வீட்டில் தனித்திருந்த மூதாட்டியைத் தாக்கி நகை மற்றும் பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அதிகாலை 3 மணியளவில் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து உள் நுழைந்த கொள்ளையன் தனிமையில் இருந்த மூதாட்டியை தாக்கிவிட்டு வீட்டிலிருந்த பத்தரை பவுண் நகை மற்றும் ஒரு இலட்சத்து 13 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முகமூடி, கையுறை ஆகியன அணிந்துவந்த கொள்ளையன் ஒருவனே குறித்த துணிகரத் திருட்டில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 35 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு





(வவுனியா நிருபர்)

வவுனியா, போகஸ்வெவ பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 35 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள கோட்ட பிரிவுக்குட்பட்ட போகஸ்வேவ மகா வித்தியாலயத்தில் காற்றின் காரணமாக மரமொன்றில் காணப்பட்ட குளவி கலைந்து பறந்து பாடசாலை மாணவர்களை தாக்கியுள்ளது.

இதனால் பாதிப்படைந்த 35 மாணவர்களில் 12 பேர் பதவியா வைத்தியசாலையிலும், 20 பேர் வவுனியா வைத்தியசாலையிலும், 03 பேர் மடுகந்த வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# வீடுகளை விற்பதாகக் கூறி நடைபெற்ற நூதன திருட்டு!

## கைதாகிய திலினியின் மேலும் பல மோசடிகள் அம்பலம்



பல செல்வந்தர்களை ஏமாற்றி பல ஆயிரம் கோடி ரூபா மோசடியில் ஈடுபட்ட திலினி பிரியமாலி, “த வன்” நிறுவனத்தில் வீடுகளை விற்பனை செய்வதாகக் கூறி மக்களை ஏமாற்றியதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சிஐடி) மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கட்டடம், ‘கிரிஷ்’ நிறுவனத்தின் கட்டுமானமாகக் கருதப்படுகிறது.

80 தளங்களைக்கொண்ட இரண்டு கோபுர கட்டடத்தில் தற்போது ஒரு கோபுரம் கட்டும் பணி நடந்து வருகிறது.

கட்டிடம் கட்டுவது தொடர்பான நிறுவனத்தின் அலுவலகம் கட்டிடத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடத்தில் திலினி பிரியமாலியின் அலுவலகமும் அமைந்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. “த வன்” கட்டடத்தில் வீடு வாங்கித் தருவதாகக் கூறி அவர் பணம் பெற்று மக்களை ஏமாற்றியுள்ளதாக சிஐடி விசாரணையில் தெரியவந்துள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவைப் பெற்று கடந்த சனிக்கிழமை (15) காலை 10 மணியளவில் சிறைச்சாலையிலிருந்து வெளியே அழைத்துச் சென்று அலுவலகத்தை கடுமையான சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அங்கு கிடைத்த பல ஆவணங்கள் மற்றும் பாதுகாப்பு கமெரா தரவுகள் மற்றும் தன்னைச் சந்திக்க அந்த அலுவலகத்திற்கு வந்தவர்கள் மற்றும் அங்கிருந்து அவர் என்ன நடவடிக்கைகள் செய்தார் என்பது பற்றிய தகவல்களைக் கைப்பற்றியுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் திலினி பிரியமாலியின் நிறுவன அலுவலகத்தில் பணியாற்றிய பல ஊழியர்களிடமும் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர். அதுமட்டுமன்றி, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சிலரது கைத்தொலைபேசிகளை பகுப்பாய்வு நோக்கத்திற்காக கையகப்படுத்தியுள்ளனர்.



இரத்தினபுரி, கலபொட தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் தினம் அண்மையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதிபர் கே. தினேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# துப்பாக்கிச்சூட்டுக்கு ஆயுதம் வழங்கிய இராணுவச் சிப்பாய்

## கிளிநொச்சி முகாமில் வைத்து கைது

அஹுங்கல்ல ஹோட்டலுக்கு முன்னால் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு ரி-56 துப்பாக்கியை வழங்கிய இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கிளிநொச்சி இராணுவ முகாமில் வைத்து நேற்றுமுன்தினம் (16) பிற்பகல் கைதுசெய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் 2ஆவது கொமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த 41 வயதுடையவர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் இராணுவத்திற்கு சொந்தமான ரி-56 துப்பாக்கியை வழங்கியுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த கொலைச் சம்பவத்திற்கு உதவிய மற்றுமொரு சந்தேகநபர் நேற்று மெகதன்ன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரிக்கும் சாத்தியம்

கடந்த வருடத்தை விட இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் காலநிலை மாற்றத்தினால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கையில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 912 ஆகவும், இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 59 ஆயிரத்து 317 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் டெங்கு நோய் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

# அகில இலங்கை ஒலிம்பியாட் போட்டியில் சாஹிரா மாணவிக்கு இரண்டாம் இடம்




அகில இலங்கை ஒலிம்பியாட் கணிதப் போட்டியில் பொலன்னறுவை சாஹிரா ஆரம்ப பாடசாலையின் மாணவி எம்.என்.இல்மா ஸைனப் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கிக்கொண்டுள்ளார்.

இம்முறை தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் இந்த மாணவி அகில இலங்கை ஒலிம்பியாட் போட்டியில் பொலன்னறுவை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் பதக்கம் வென்ற முதலாமவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கான விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த மாணவி கணித ஆசிரியர் கே.எல்.எம்.நபீல், ஆசிரியை வை.எல்.எவ். சுக்ரியா ஆகியோரின் புதல்வியாவார்.

# கருவாடு விலையில் சடுதியான வீழ்ச்சி



நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வந்ததுடன், நெத்திலி உள்ளிட்ட கருவாடுகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்பட்டன.

கடந்த ஆறு மாதங்களாக காணப்பட்ட இந்த நிலைமையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கருவாடு இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது கருவாடுகளின் விலைகள் 35 வீதத்திலிருந்து 40 வீதம் வரை குறைந்துள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட உலர் மீன்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலர் மீன்களின் கையிருப்பை சரியான முறையில் பேணப்பட்டமை உட்பட பல காரணங்களினால் கருவாடுகளின் விலைகள் கணிசமாக குறைந்துள்ளதாகவும் இலங்கை கருவாடு இறக்குமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

# வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை



வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம், மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை வடமாகாண சபை வளாகம், கைதடியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிப்பாளர் சுஜிவா சிவதாஸ் தெரிவித்தார்,

குறித்த நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

வாசித்தலில், எழுதுதலில், விசேடதேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையும் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளலும், சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல், தனிப்பட்ட மோட்டார் கோச்சினை ஒமினிபஸ் ஆகமாற்றம் செய்தல், வாகனப் பதிவுப் புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகன இலக்கத்தகடு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள், வாகன உடமை மாற்ற விண்ணப்பங்கள் கையேற்றல், 2014, 2015ஆம் ஆண்டு செயற்றிட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாகனங்களின் நிபந்தனை களை நீக்குதல், வாகன நிறை சான்றிதழ் பெற்றுக்கொள்ளல், இதுவரை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாத நிலுவைகள், வாகன வருமானவரி தொடர்பான விடயங்கள் நடமாடும் சேவையில் இடம்பெறவுள்ளதன் காரணமாக பொதுமக்கள் இரண்டு நாள் நடமாடும் சேவையின் மூலம் பயன் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

# பேருவளையில் இரு நூல்களின் வெளியீடு



(பேருவளை பீ.எம்.முக்தார்)

மக்கொன ஸுல்பிகா எம்.ஸாலிஹ் ஸினான் எழுதிய ‘சிந்திக்க மறந்த உள்ளங்கள்’ மற்றும் எழுத்தாளர் திக்குவல்லை ஸஃப்வானின் வாப்பாவுக்கு ஒரு சால்வை ஆகிய சிறுகதை நூல்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (16) பேருவளை, மருதானையிலுள்ள அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தர்காநகர் ஸாஹிரா கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் எம்.எல்.ஏ.எம்.அப்துல் அஃலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இரத்தினக்கல் வியாபாரியும் பியீட்டி ஜெம்ஸ் உரிமையாளருமான அஸ்ஹர் ஸவாஹிர் நூல்களின் முதல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாகவும் விசேட அதிதிகளாக அல்-பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் மஸ்னவியா றிப்கான் மற்றும் எழுத்தாளரும் கவிஞருமான தர்காநகர் ரி.எம்.ஸபா கலந்துகொண்டனர். அத்துடன், பாடசாலை அதிபர்கள், எழுத்தாளர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

‘சிந்திக்க மறந்த உள்ளங்கள்’ சிறுகதை நூலுக்கான ஆய்வுரையை திக்குவல்லை ஸும்ரியும், ‘வாப்பாவுக்கு ஒரு சால்வை’ நூலுக்கான ஆய்வுரையை பன்னூலாசிரியர், கலாபூஷணம் திக்குவல்லை கமாலும் நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து பன்னூலாசிரியர் கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மத் பெண்களின் உரிமைகள் தொடர்பில் கருத்துரை வழங்கினார்.

பாடசாலை, அஹதியா சிறார்களின் காலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன், இலங்கை வானொலி முஸ்லிம் சேவை புகழ் கலைஞர்களின் சஞ்சாரம் நிகழ்ச்சியும் தொடர்ந்து மேலும் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# கருத்து கந்தசாமி

கோட்டாபய ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்துக்கு எதிராக வெறும் 2 இலட்சம் பேரே திரண்டதாகவும் அவர்களுக்குப் பயந்தே கோட்டா முன்வைத்த காலை பின்வைத்ததாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்திருக்கிறார்.




விட்டால் போராட்டமோ மக்கள் கிளர்ச்சி என்ற ஒன்றோ நடக்கவில்லை என்று சாகர கூறினாலும் கூறுவார்..

நேற்றுமுன்தினம் நாவலப்பிட்டியில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக நடந்த எதிர்ப்புப் போராட்டத்தை பார்த்தபின்னராவது மக்களின் மனநிலை பொதுஜன பெரமுனகாரர்களுக்கு புரியுமா என்பது தெரியவில்லை.

இலங்கையில் குடும்ப ஆட்சி அரியணை ஏறுவது இப்போதைக்கு கஷ்டமாகத்தான் இருக்கப்போகிறது. பொறுத்திருந்து பாருங்களேன்.

# நீரில் மூழ்கி வைத்தியர் பரிதாபமான மரணம்



மஹியங்கனை ஆரம்ப வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தனது நண்பருடன் குளித்துக் கொண்டிருந்த மாப்பகடை குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

திவுலபிட்டிய கம்பஹா பகுதியைச் சேர்ந்த லக்ஷான் விஜேரத்ன என்ற 31 வயதுடைய வைத்தியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மருத்துவர் மஹியங்கனை ஆரம்ப வைத்திய சாலையின் மகப்பேறு மற்றும் பெண்ணோயியல் பிரிவில் பணியாற்றினார். ஓராண்டுக்கு முன் வேலைக்கு வந்துள்ளார்.

வழக்கமாக குளத்தில் அந்த நேரத்தில் குளிக்க நிறைய பேர் இருப்பார்கள், ஆனால், அன்று மழை பெய்ததால் ஒரு பெண் மட்டுமே குளித்துக் கொண்டிருந்தார். மூழ்கியவருடன் இருந்த மற்றைய வைத்தியர் உதவிக்கு கூச்சலிட்டபோது, ஏரியில் நீந்திக்கொண்டிருந்த பெண் கிராமத்திற்கு ஓடிவந்து கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவை வரவழைத்து நீரில் மூழ்கிய வைத்தியரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

எனினும், சம்பவம் நடந்து சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குப் பின்னரே நீரில் மூழ்கிய மருத்துவரின் உடலை கிராம மக்களால் மீட்க முடிந்தது.



இலங்கை நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நாடாளுமன்ற முறைமைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி கொழும்பு - 4 முஸ்லிம் பெண்கள் கல்லூரி மாணவியருக்கு அண்மையில் இடம்பெற்றது. இதில் நாடாளுமன்ற சட்டவாக்க திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனகாந்த சில்வா நாடாளுமன்ற அமர்வு தினமொன்றின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்ததுடன், நிர்வாகத் திணைக்களப் பணிப்பாளர் செல்வி ஜீ. தட்சணாராணி சட்டம் இயற்றும் செயன்முறை தொடர்பில் விளக்கமளித்தார். இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் நஸ்ரியா முனாஸ் உள்ளிட்ட ஆசிரியர்களும் மாணவியரும் கலந்துகொண்டனர்.

# யானையின் தாக்குதலில் கணவனும் மனைவியும் பலி!

(மண்டூர் நிருபர்)

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாவெட்டை யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான பரசுராமன் பிள்ளையான் (வயது 65) என்பவரே நேற்று முன்தினம் (16) அதிகாலை யானையின் தாக்குதலில் மரணித்தவராவார்.

குடாவெட்டையில் தனியாக தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது, நள்ளிரவு வேளையில் தனது வீட்டு வளவுக்குள் நின்ற தென்னை மற்றும் பயன்தரும் மரங்களை யானைகள் உட்கொள்வதை அவதானித்ததால் அதனை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டபோதுதான் கோபமடைந்த யானையினால் துரத்தப்பட்டு வயல் வெளியில் வைத்து தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளார்.

சென்ற 30-06-2022 அன்று கோயிலுக்கு சென்று வீடு நோக்கி வந்த இவரது மனைவியை வீட்டிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் வைத்து யானை தாக்கியதால் சம்பவ இடத்திலேயே மரணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரியின் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு சென்ற மரண விசாரணை அதிகாரி நஸீர் மரண விசாரணைகளை மேற்கொண்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைத்தார்.

## அறிவார்ந்த சமூகத்திற்கு வாசிப்பு ஊர்வலம்

(சீனக்குடா நிருபர்)

"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு" எனும் தொனிப்பொருளிலான இவ்வருட தேசிய வாசிப்பு மாதத்தினை அனுஷ்டிக்கும் ஓர் அங்கமாக கிண்ணியா பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வீதி ஊர்வலம் ஒன்று நேற்று (17) நடைபெற்றது.




பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.நசீர் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் குறிஞ்சாக்கேணி அரபா மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

## சர்வதேச இடர் அபாயக் குறைப்பு தினத்தை முன்னிட்டு உயிர் காப்பு விழிப்புணர்வு பயிற்சியும் கண்காட்சியும்





(மட்டக்களப்பு நிருபர்)

சர்வதேச இடர் அபாயக் குறைப்பு தினத்தை முன்னிட்டு உயிர் காப்பு விழிப்புணர்வுப் பயிற்சியும் கண்காட்சியும் மாணவர்கள், பொதுமக்கள், படையினர், பொலிஸார் முன்னிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது.

திருகோணமலை நகர கடற்கரையில் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), இளைஞர் அபிவிருத்தி அகம், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம், இலங்கை பொலிஸ், கடற்படை ஆகியவை கூட்டிணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை முன்னெடுத்திருந்தன.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லயனல் குணதிலக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான டி.டி.வி. பத்திரண, லக்மால் குணத்திலக்க உட்பட உயர் பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ், இளைஞர் அபிவிருத்தி அகம் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் திருகோணமலை வலய பிரதிக் கல்விப் பணிப்hளர் சுபாங்கி ஜோன்ஸன் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு உயிர்காப்பு நிகழ்ச்சி முன்னோட்ட கண்காட்சியைக் கண்டு களித்தனர்.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லயனல் குணதிலக்க, இது குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்கு பெருந்துணை புரியும். நீரில் மூழ்கி மரணிப்போரில் மீட்டு உயிர் காப்பது ஒரு உயிர் கொடுத்து வாழ்வளிக்கும் ஒரு செயலாகும். வைத்தியர்கள் வருவதற்கு முன்னர் உயிர்காப்பதுதான் முழுமுதற் கடமை. கடந்த காலத்தில் திருகோணமலை கடலில் மூழ்கிய 27 வெளிநாட்டினர் உட்பட மொத்தம் 258 பேர் காப்பாற்றப்பட்டுள்ளார்கள்.

நீரில் மூழ்குவோர் நாமாக இருக்கலாம், நமது பெற்றோராக இருக்கலாம் சகோதரர்களாக இருக்கலாம், முன் பின் தெரியாதவர்களாக இருக்கலாம், சக மாணவர்களாக இருக்கலாம் யாராக இருந்தாலும் அவர்களை தக்க தருணத்தில் உயிர் காப்பதற்கு நாம் உயிர்காப்புப் பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும். எனவே, நீச்சலையும் உயிர்காப்பு பயிற்சிகளையும் கற்றுக் கொள்வது மிக முக்கியமாக மாணவர்களுக்கு நல்லது என நான் கருதுகின்றேன்" - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சர்வதேச வறுமை ஒழிப்புத் தினத்தில் முன்பள்ளி சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு

(மட்டக்களப்பு நிருபர்)

மண்முனை தென்எருவில்பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவின் மகிழுர்முனை சில்வபெல்ஸ் முன்பள்ளி பாடசாலையில் சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியாவின் வழிகாட்டலில், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமார் தலைமையில் நேற்று (17) சர்வதேச வறுமை ஒழிப்புத் தினத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்பள்ளிகளின் போசாக் கின்மையை குறைக்கும் பொருட்டு நாளாந்தம் முன்பள்ளி சிறார்களுக்கு போசணைமிக்க இலைக்கஞ்சிக் கோப்பை வழங்கும் வேலைத்திட்டம் களுதாவளை-01 வீனஸ் முன்பள்ளி மற்றும் துறைநீலாவணை - தெற்கு, 01 களம் முன்பள்ளி பாடசாலைகளிலும் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அருந்ததி சீவரெத்தினம், கருத்திட்ட முகாமையாளர் திருமதி சோ.தமிழ்வாணி, எருவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பா.துரைராசசிங்கம், மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஆனந்தமோகன், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிந்திரன், கிராமசேவை உத்தியோகத்தர் எஸ்.தேவதாசன், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுதாய அடிப்படை அமைப்பு), சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், போதகர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், சிறார்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# உலகக்கிண்ணத்தில் தொடரும் நாடகங்கள்: நேற்றுமுன்தினம் இலங்கை; நேற்று மே.இ.தீவுகள்!

ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஸ்கொட்லாந்து – மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இரு தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற மேற்கிந்திய தீவுகளை ஸ்கொட்லாந்து அணி 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அதிர்ச்சியளித்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை – நமீபிய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் நமீபிய அணி இலங்கை அணியை வீழ்த்தி அதிர்ச்சியளித்திருந்த நிலையில், இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பலமான அணிகளை டெஸ்ட் அந்தஸ்து அல்லாத அணிகள் வீழ்த்துவது எதிர்பாராத முடிவுகளாக அமைகின்றன.

நேற்று ஹோர்பாட்டில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் ஆடிய ஸ்கொட்லாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்களை குவித்தது. பதிலெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 18.3 ஓவர்களில் 118 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோனது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஆசிய சம்பியன்களின் உலகக்கிண்ணக் கனவு இன்றுடன் முற்றுப்புள்ளியாகுமா?

(ஏ. அகீல் சிஹாப்)

நடப்பு ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் நமீபிய அணியை எதிர்கொண்ட இலங்கை அணி, குறித்த போட்டியில் 55 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவிய நிலையில் அடுத்த சுற்றான 'சுப்பர் 12' சுற்றுக்கு முன்னேற இன்னும் எஞ்சியுள்ள இரு ஆட்டங்களிலும் கட்டாய வெற்றிபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 15ஆவது ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணி இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பலம்வாய்ந்த அணிகளை எல்லாம் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. எனினும், ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்றில் ஆடவேண்டிய நிலை ஆசிய சம்பியன்களுக்கு ஏற்பட்டது.

அந்தவகையில் இதனை சிறந்த பயிற்சியாக எடுத்துக்கொண்டு அடுத்த சுற்றுக்கு இலகுவாக முன்னேறலாம் என்றிருந்த இலங்கை அணிக்கு முதல் ஆட்டமே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நமீபியாவை எதிர்கொண்ட இலங்கை அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு என இரு துறைகளிலும் சொதப்ப 55 ஓட்டங்களினால் பாரிய தோல்வியைச் சந்தித்தது.

முதல் சுற்றில் குழு - 'ஏ'யில் 3 ஆட்டங்களில் ஆடும் இலங்கை அணி எதிர்பாராத தோல்வியைச் சந்தித்த நிலையில், அடுத்துவரும் இரு ஆட்டங்களிலும் கட்டாய வெற்றி பெற வேண்டியதுடன், சிறந்த நெட் ரன்டேர் அடிப்படையிலும் வெற்றிபெற வேண்டும். அப்படியானால்தான் அடுத்த சுற்றுக்கு முன்னேறலாம். இலங்கை அணி தங்களது அடுத்த போட்டியில் இன்று ஐக்கிய அரபு இராச்சிய அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி பி.ப. 1.30 மணிக்கு ஆரம்ப மாகிறது.

இந்த ஆட்டத்தில் இலங்கை நமீபியாவுடன் அடைந்த தோல்வியை போன்று ஐக்கிய அரபு இராச்சியத்துடன் அதிர்ச்சி தோல்வியடைந்தால் இன்றுடன் ஆசிய சம்பியன்களின் உலகக்கிண்ணக் கனவு முற்றுப்புள்ளியாகும்.






எங்கள் சிங்கங்களை வாழ்த்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.

Champion
Germ Fighting Real Soap

# பிரான்ஸில் நடைபெறும் விசாரணை வளையத்தில் நெய்மர்



(ரமணி)

பிரேஸில் சூப்பர் ஸ்டார் நெய்மர் ஸ்பெயினில் ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்கு முன்பு பார்சிலோனாவுக்கு மாற்றப்பட்டதில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். 2013ஆம் ஆண்டு பிரேஸிலிய கிளப்பான சாண்டோஸிலிருந்து அவர் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரது விவகாரங்களை நிர்வகிக்கும் அவரது பெற்றோருடன் பார்சிலோனாவில் திங்களன்று விசாரணை தொடங்குகிறது. இவர்கள் மூவரும் வணிக ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர்.

நெய்மர் குடும்பத்திற்குச் சொந்தமான என். அண்ட் என். நிறுவனத்திற்கு 40 மில்லியன் யூரோக்களும், சாண்டோஸுக்கு 17.1 மில்லியன் யூரோக்களும் செலுத்தியதாகவும், அதில் 6.8 மில்லியன் டி.ஐ.எஸ்க்கு வழங்கப்பட்டதாகவும் கிளப் தெரிவித்துள்ளது. ஆனால், நெய்மர், பார்சிலோனா மற்றும் பிரேஸிலிய கிளப் ஆகியவை ஒப்பந்தத்தின் உண்மையான செலவை மறைக்க ஒத்துழைத்ததாக டி.ஐ.எஸ். குற்றஞ்சாட்டுகிறது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் 10 மில்லியன் யூரோ அபராதத்தை எதிர்கொள்ள நேரிடும்.

நவம்பர் 20ஆம் திகதி உலகக்கிண்ணப் போட்டி தொடங்குவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு ஒக்டோபர் 31 வரை விசாரணை நடத்தப்படவுள்ளது, நான்கு நாட்களுக்குப் பிறகு செர்பியாவிற்கு எதிராக பிரேஸிலை குரூப் ஜி தொடக்க ஆட்டத்தில் நெய்மர் வழிநடத்துவார்.

# கொரோனா உறுதியான வீரரும் போட்டியில் ஆடலாம் – கட்டுப்பாடுகளை தளர்த்தியது ஐ.சி.சி.

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் முதல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகையில் கொரோனா உறுதியான வீரரும் போட்டியில் ஆடலாம் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.




கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்றுப் பரவலால் கிரிக்கெட் வீரர்களுக்கு தனிமைப்படுத்துதல் உட்பட பல கட்டுப்பாடுகளை ஐ.சி.சி. விதித்திருந்தது, தற்போது அந்தக் கட்டுப்பாடுகள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நடைபெற்றுவரும் ரி20 உலகக்கிண்ணத் தொடரில் கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்ட வீரர்களையும் விளையாட ஐ.சி.சி. அனுமதி அளித்துள்ளது. அண்மைய ஐ.சி.சி. நிபந்தனைகளின்படி, அணி மருத்துவர் அனுமதித்தால் கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்ட வீரர் விளையாட அனுமதிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, கொரோனா உறுதிசெய்யப்பட்ட வீரர்கள் தனிமைப்படுத்தப்படமாட்டார் என்றும், போட்டியின்போது வீரர்களுக்கு கட்டாய சோதனை எதுவும் இருக்காது எனவும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

# அதிபர் திறன்விருத்தி பாடநெறிக்கான சான்றிதழ் வழங்குவதில் கிழக்கில் தாமதம்

## பாடசாலை அதிபர்கள் கவலை

(கிண்ணியா நிருபர்)

இலங்கையின் அரச பாடசாலைகளில் பாடசாலை நிறுவனப் பொறுப்பினை எடுத்து நடத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இலங்கை அதிபர் சேவையாகும்.

அதிபர் சேவை புதிய பிரமாணக் குறிப்பிற்கமைய அதிபர் சேவை தரம்-3இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் அதிபர் சேவை தரம் - 2இற்கு பதவி உயர்வு பெறுவதாயின், கட்டாயமாக அடிப்படை அதிபர் திறன்விருத்தி பயிற்சி பாடநெறியினை (BPP) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இந்நிலையில், 2016இல் அதிபர் சேவை தரம் - 3இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிபர்களுக்கு இப்பயிற்சி பாடநெறி பல மாகாணங்களில் நிறைவடைந்துள்ளது.

அதற்கான சான்றிதழை சில மாகாணங்கள் தமது கல்வி வலயங்களினூடாக உரிய அதிபர்களுக்கு அவர்களின் பதவி உயர்வைக் கருத்திற்கொண்டு வழங்கிவிட்டன.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலும் அதிகமான தரம் - 3 அதிபர்களுக்கு இரு கட்டங்களில் இப்பயிற்சிப்பாடநெறி கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மட்டக்களப்பு, சத்துருகொண்டான் சர்வோதய நிலையத்தில் வதிவிட செயலமர்வாக நடந்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பயிற்சிப் பாடநெறியை நிறைவுசெய்த அதிபர் சேவையினருக்கு சான்றிதழ் வழங்குவதில் இழுத்தடிப்பு நிலை காணப்படுவதாக கூறப்படுகின்றது. இச்சான்றிதழை வழங்கினால்தான் பதவி உயர்வுக்காக அதிபர் சேவை தரம் - 3 இல் உள்ளவர்கள் தரம் - 2இற்கு விண்ணப்பிக்க முடியும்.

சுமார் 4,000இற்கும் மேற்பட்ட அதிபர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் - 3 இல் கடமை புரிகின்றனர். இச்சான்றிதழ் வழங்குவதிலுள்ள தாமதம் அவர்களின் பதவி உயர்வினை தாமதிக்கலாம்.

மேலும் புதிய பாடசாலைக்கு அதிபர் பதவிக்காக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்காக செல்கின்றபோது புள்ளிகளைப் பெறுவதற்கு தடையாக அமைவதோடு அதிபராக பாடசாலைப் பொறுப்பைப் பெறுவதற்கும் சவாலாக அமையலாம்.

இது குறித்து கிழக்கில் அதிபர் சேவை பதவியுயர்வை எதிர்பார்த்திருக்கும் அதிபர்கள் கவலையடைந்துள்ளனர்.

# 32 வருடங்களுக்குப் பின்னர் பூர்வீகக் காணிகளில் குடியேறிய அம்பாறை மாவட்ட கனகர் கிராம மக்கள்





(வாழைச்சேனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கனகர் கிராம மக்கள் சுமார் 32 வருடங்களுக்குப் பின் தங்களது பூர்வீகக் காணிகளில் குடியேறியுள்ளனர்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவதற்கு பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்த மக்கள் தற்போது துணிச்சலாக தமது காணிகளை தாமாகவே முன்வந்து துப்புரவுசெய்து வருகின்றனர். சர்வதேச உணவுத் தினத்தை முன்னிட்டு இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் பங்களிப்புடன் சர்வதேச உணவுத் தினத்தை முன்னிட்டு மேற்படி கிராமத்தில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின் காணிகளில் தானியச் செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது. தமது பூர்வீகக் காணிகளை துப்புரவுசெய்துள்ள 25 பயனாளிகள் தானியச் செய்கைக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயறு, சோளம், கச்சான் ஆகிய தானிய வகைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, அம்மக்களின் காணிகளில் அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தித் தரக்கோரி அரச திணைக்களங்களுக்கும் பரிந்துரைசெய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்டது.

இருந்தபோதிலும் அரச திணைக்களங்கள் மக்கள் மீளக்குடியேறுவதற்கு எதிர்ப்பாக உள்ளமையால் மக்களாகவே முன்வந்து குடியேறியுள்ளனர்.

இம்மக்கள் மீளக்குடியேறுவதற்கு பக்கபலமாக உள்ள சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பிற்கு நன்றியைத் தெரிவித்ததோடு, தமது பூர்வீகக் காணிகளை இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதையும் உறுதியாகக் கூறிக்கொண்டனர்.

இவ்வாறான நிலையில், இதற்கு மறுபுறம் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாளுக்குநாள் மோசமாகும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த நிலை காரணமாக மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒருவேளை உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கும் மக்கள் பெரும் போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை தமக்கான சரியான அரசியல் தீர்வு கிடைக்காத நிலையில் மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த நிலைக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு காரணமாக அமைந்தாலும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு தரப்பினரால் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் முக்கிய காரணமாகும்.

கிழக்கைப் பொறுத்தவரையில் சுமார் 50,000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் அரசு மற்றும் பல்வேறு தரப்பினரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் காரணமாக தமக்கான உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு வழிகளிலும் மக்களின் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படுமாயின் அவர்களின் வீட்டுத் தேவைக்கான உணவை யேனும் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும் என்பது உறுதியான விடயமாகும். இந்த நிலையை எமது அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டியது முக்கிய விடயமாகும்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு - சில்லிக்கொடியாற்றில் யானை தாக்கி குடும்பஸ்தரொருவர் பலி!



(மண்டூர், மட்டக்களப்பு நிருபர்)


கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில்லிக்கொடியாறு பகுதியில் யானை தாக்கி 7 பிள்ளைகளின் தந்தை பலியாகியுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

சில்லிக்கொடியாறு பகுதியில் பண்ணை யொன்றில் பராமரிப்பாளராக கடமையாற்றி வந்த காஞ்சிரங்குடா பகுதியைச் சேர்ந்த 65 வயதையுடைய பாலிப் போடி அரியநாயகம் என்பவரே கடந்த சனிக்கிழமை (15) இரவு 10 மணியளவில் யானை தாக்கி மரணமடைந்துள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்று பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***பெரும்போக அறுவடை அடுத்த சித்திரை புத்தாண்டுவரை எந்த எலக்சனையும் நடத்தவேணாம் எண்டு விவசாய அமைப்புகள் சொன்னதாக ஒரு செய்தி வந்தது எலுவா?***

***அடேதம்பிகளே எலக்சனுக்கும் பெரும்போக நெல்செய்கைக்கும் என்னடா சம்பந்தம்..?***

***நரி விளையாட்டு இப்ப விவசாய அமைப்பைக்கொண்டு இப்படி சொல்ல வைச்சிருக்கு. ஆருக்கடா காது குத்துறயள்!***

***சும்மா கிடந்த நரிக்கு அதிர்ஷ்டத்தில பதவி கிடைச்சதால இதுவும் சொல்வார் இன்னமும் சொல்வார்!***

# அம்பாறை மாவட்டத்தில் நெனசர வேலைத்திட்டத்தில் நூல்கள் வழங்கிவைப்பு



(பெரியநீலாவணை நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நெனசர பாடசாலை நூலக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட செயலகம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு இணைந்து ஏற்பாடுசெய்த பாடசாலை நூலகங்களுக்கு நூல்களை வழங்கும் நிகழ்வு நேற்று (17) சாய்ந்தமருது மல்ஹறுல் சம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நூல் தொகுதிகளை வழங்கி வைத்ததுடன், பாடசாலைகளிலிருந்து மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் நிந்தவூர் பிரதேச செயலாளருமான ஏ.எம்.அப்துல் லத்தீப், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர்



ரி.எம்.றிம்ஸான், மல்ஹறுல் சம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.நபார் உட்பட பிரதேச செயல்களில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலமான பிரதேச செயலகங்களின் கீழ் உள்ள தெரிவுசெய்யப்பட்ட 15 பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

# கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அக்கரைப்பற்று பிரதேச கலை மன்றங்களுக்கு விஜயம்




(அக்கரைப்பற்று நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்ஷன், அக்கரைப்பற்றில் அமைந்துள்ள ஹல்லாஜ் இஸ்லாமிய கலை மன்றம் மற்றும் காஜா மன்றங்களின் காரியாலயத்திற்கு கணிப்பீடு விஜயமொன்றை மேற்கொண்டு பார்வையிட்டார்.

றசாக் முஹம்மட் அலியின் ஒருங்கிணைப்பில் மன்றத்தின் ஸ்தாபகரும், பல கலைகளை ஒன்றிணைத்து இயங்கிக்கொண்டிருக்கும் அல்- குத்பு அஷ்-செய்யத், கலிபதுல் ஹல்லாஜ் மக்கத்தார் (றஹ்) (காதிரிய்யி ஜிஸ்த்திய்யி றிபாய்யி நக்ஷபந்) தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்ஷன், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எ.எல்.தௌபீக், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மன்றத்தின் நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கலை மன்றங்களின் வளர்ச்சி, எதிர்கால அபிவிருத்தி மற்றும் ஏனைய திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

## மட்டு. போரதீவுப்பற்றில் காட்டு யானை தாக்கியதில் முதியவர் பலி



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முனைத்தீவு கிராமத்திற்குள் நேற்று (17) அதிகாலை சுமார் 2.45 மணியளவில் 2 காட்டு யானைகள் உட்புகுந்துள்ளன.

இந்நிலையில், தமது வீட்டில் கணவன், மனைவி இருவரும் உறங்கிக்கொண்டிருந்த நிலையில், வெளியில் ஏதோ சத்தம் கேட்கின்றது, வளவினுள் மாடுகள் உட்புகுந்து விட்டதாக நினைத்துக்கொண்டு கையில் தடி ஒன்றையும் எடுத்துக்கொண்டு வெளியில் வாசலுக்கு வந்துள்ளார். அதேவேளை, அவரது வாசலில் நின்ற காட்டு யானைகளில் ஒன்று அந்த முதியவரைத் தாக்கி அடித்துள்ளது. இதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார் என அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு காட்டு யானைகள் நேற்று (17) அதிகாலை 2.245 மணியளவில் இவ்வாறு முனைத்தீவுக் கிராமத்தினுள் புகுந்து அங்கிருந்த வாழை, மா மற்றும் மதில் ஒன்றையும் சேதப்படுத்தும் காட்சி அருகிலிருந்து கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. எனினும், யானை முதியவரையும் தாக்கிவிட்டுச் சென்றுள்ளது. இதில் முனைத்தீவுக் கிராமத்தைச் சேர்ந்த 69 வயதுடைய கா.சங்கரப்பிள்ளை என்பவரே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் அறிந்த பொலிஸார் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட பலரும் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளையும், மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் திருமலை வலயக்கல்வி அலுவலகத்துக்கு விஜயம்



(கிண்ணியா நிருபர்)

நாடாளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான ஏ.அரவிந்தகுமார் நேற்று முன்தினம் (16) திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்திற்கு விஜயம் செய்தார்.


திருகோணமலை கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடந்தகால நிகர் நிலை, நிகழ் நிலை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் சமகாலக் கல்வி முன்னேற்றச் செயற்பாடுகள் பற்றி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரனையும், கல்வி அபிவிருத்திக் குழுவினரையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இராஜாங்க கல்வி அமைச்சர் அவர்களுக்கு வலயக்கல்விப் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்ட / முன்னெடுக்கப்படுகின்ற கற்றல் - கற்பித்தல் மற்றும் கற்றல் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பற்றி வலயக்கல்விப் பணிப்பாளரால் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான முன்வைப்பு செய்யப்பட்டிருந்தது.



திருகோணமலை கல்வி வலயத்தின் கற்றல் சார் முன்னெடுப்புகளையும் மற்றும் இதர செயற்பாடுகளையும் இராஜாங்க கல்வி அமைச்சர் வெகுவாகப் பாராட்டியதுடன், அலுவலக உள் - வெளிக் கட்டமைப்புகளையும் பார்வையிட்டு தனது ஆக்கபூர்வமான பின்னூட்டல்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி, கலாசார மேம்பாட்டு தாபனத்தினால் கல்முனை எக்டோ நூலகத்தில் இரத்ததானம்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக கல்முனை கல்வி, கலாசார மேம்பாட்டு தாபனத்தினால் (ECDO) ஏற்பாடுசெய்யப்பட்ட இரத்ததான முகாம், கல்முனை பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள எக்டொ (ECDO) நூலகத்தில் கடந்த சனிக்கிழமை (15) இடம்பெற்றது.

கல்முனை கல்வி, கலாசார மேம்பாட்டு தாபனத்தின் (ECDO) அறிமுகத்துடன் ஆரம்பமான இரத்ததான முகாமானது, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல்.எவ்.ரகுமானின் வழிகாட்டலில் வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் கே.வித்யா தலைமையிலான இரத்த வங்கி பிரிவினரினால் இரத்ததான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

கல்முனை கல்வி, கலாச்சார மேம்பாட்டு தாபனத்தின் தலைவர் எம்.எம்.ரிஸ்கான், செயலாளர் எஸ்.எம்.நபீல், அமைப்பாளர் இசட்.ஏ.எம்.அஸ்மீர் (வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர்-கல்முனை), பொருளாளர் எம்.வை.எம்.சியாம் உட்பட அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த இரத்ததான முகாமில் அதிகமான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் வருகை தந்து இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கல்வி, கலாசார மேம்பாட்டு தாபனமானது சுமார் 20 வருட காலமாக கல்முனையில் பல்வேறுபட்ட சமூகநல பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இதன்போது இரத்ததான முகாமில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் தனது நன்றியை தெரிவித்தனர்.



# சிங்கப்பூரில் பூச்சிகளை உட்கொள்ள அனுமதி

சிங்கப்பூரில் பூச்சிகளை உட்கொள்ள விரைவில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

பூச்சிகளை மனிதர்கள் உணவாகக் கொள்ளவும், கால்நடை தீவனமாக அளிக்கவும் அனுமதிப்பது தொடர்பாக அந்நாட்டு உணவு மற்றும் கால்நடைத் தீவன தொழில் துறையிடம் அரசு கருத்து கோரியுள்ளது.

இதற்கு அனுமதி கிடைத்தால் பாச்சைகள், வண்டுகள், அந்துப்பூச்சிகள், தேனீக்கள் போன்ற பூச்சி இனங்களை மனிதர்கள் உட்கொள்ள முடியும். இந்தப் பூச்சிகளை நேரடியாகவோ, எண்ணெயில் பொறித்தோ சாப்பிட முடியும் என 'ஸ்டிரைட்ஸ் ரைம்ஸ்' நாளிதழ் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுதொடர்பான நடைமுறைகளை பூச்சிகளை உணவாக உட்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்கொரியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளிடமிருந்து சிங்கப்பூர் உணவுத்துறை பெற்றுள்ளது.

''முழுமையான அறிவியல்பூர்வ ஆய்வை மேற்கொண்டு சில குறிப்பிட்ட பூச்சி இனங்களை உணவாக உட்கொள்ள அனுமதிக்கலாம் என மதிப்பிட்டுள்ளோம்'' என உணவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக மனிதர்கள் உணவாக உட்கொள்ளவும், கால்நடைத் தீவனத்துக்காகவும் வணிகரீதியான பூச்சிப் பண்ணைகளை ஏற்படுத்துவதை ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஊக்குவித்து வருகிறது.

# இலங்கைக்குள்ளிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவும் சீனா

## தீவிர கண்காணிப்பில் தமிழக கடலோரப் பகுதிகள்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவுவது மற்றும் இலங்கையின் வடபகுதியிலிருந்து தமிழக கடலோரப் பகுதிகளை நவீன சாதனங்கள் மூலம் கண்காணிப்பது என சீனாவின் ஆதிக்கமும், அத்துமீறலும் அதிகரித்துள்ள நிலையில், தமிழக கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கண்காணிப்புப் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சீன இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், தமிழகத்தில் பாதுகாப்பு எச்சரிக்கை மிகவும் பலப்படுத்தப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் சீனாவின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் நாட்டின் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பான முன்னெச்சரிக்கை சில நாட்களுக்கு முன்னர் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் அதிநவீன உளவு கருவிகள், செயற்கைக் கோள்கள், ஆளில்லா ட்ரோன்களுடன் சீன இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். ஆகையால் அனைத்து கடலோரப் பகுதிகள், மாவட்டங்கள், நகரங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் கடல் அட்டைப் பண்ணைகள் அமைத்து சீனா இத்தகைய உளவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், இலங்கை அரசியல் கட்சிகள் உதவியுடன் சீன இராணுவ உளவாளிகள் சிலர் கடல்வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவியதைத் தொடர்ந்து இத்தகைய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீன உளவுக் கப்பல் அண்மையில் நிலை கொண்டிருந்தது. அப்போதும் இதேபோல் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து தென்னிந்திய இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை எளிதாக உளவு பார்க்கக்கூடிய நவீன சாதனங்கள், செயற்கை கோள்களுடன் சீன உளவுக் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கு இந்தியா மிகக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தது. இந்தியாவின் எதிர்ப்பை மீறியே சீன உளவுக் கப்பலை இலங்கை அனுமதித்தது.

தற்போது தமிழர்களின் தாயக நிலப் பகுதிகளான முல்லைத்தீவு, அனலைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் சீனர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இலங்கையின் வடக்கே மீசாலை, சாவகச்சேரி பகுதிகளிலும் மீனவர்களுடன் சீனர்கள் இணைந்து செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை வடபகுதி கடல் வளத்தை கபளீகரம் செய்யவே சீனா இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழர் தாயகப் பகுதியான வடக்கில் பல்வேறு திட்டங்களை இந்திய அரசு செயற்படுத்தி வருகிறது. இந்தியாவுக்கும் ஈழத் தமிழருக்குமான நெருக்கமான வரலாற்று ரீதியான பிணைப்பைத் துண்டிக்கும் சதியுடன் சீனா அங்கே ஊடுருவி நிற்கிறது. வடக்குப் பகுதியைப் போலவே இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள திருகோணமலை உள்ளிட்ட கிழக்குப் பகுதிகளிலும் சீனாவின் ஊடுருவல் அதிகரித்துள்ளது.

ஈழத் தமிழ் மாணவர்களுக்கு இந்தியாவில் கல்வி கற்க நிதி உதவி செய்கிறது. ஆனால், சீனாவோ இலங்கை மாணவர்களுக்கு இலங்கையிலேயே உயர் கல்வி கற்க நிதி உதவி செய்கிறது. இலங்கையில் சீனா எதிர்காலத்தில் நிகழ்த்த திட்டமிட்டுள்ள நாசகார திட்டங்களுக்கு இலங்கையரைப் பயன்படுத்துகிற அப்பட்டமான உள்நோக்கமே இது எனவும் கூறப்படுகிறது. இத்தகைய பின்னணியில்தான் தமிழகத்தில் கடலோரப் பகுதிகள் அனைத்தும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வளையத்தின்கீழ் இருப்பதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## உலக செய்திகள்

### சர்வதேச வறுமை ஒழிப்புத் தினம் (ஒக்டோபர் 17)



# ஒருவர் வறுமையால் பாதிக்கப்பட்டால் அவரது மனித உரிமை மீறப்படுகிறது

''உலகில் ஒருவர் வறுமையால் பாதிக்கப்பட்டால், அவரது மனித உரிமை மீறப்படுகிறது'' - என்கிறார் பிரான்ஸைச் சேர்ந்த பாதிரியார் ஜோசப் ரெசின்கி. சிறு வயதிலேயே வறுமைக்கு எதிராக போராடினார். இவரது முயற்சியால் உலக வறுமை ஒழிப்புத் தினம் 1987 ஒக்டோபர் 17ஆம் திகதி உருவாக்கப்பட்டது. இதனை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தது.

அந்தவகையில் இந்த ஆண்டுக்கான வறுமை ஒழிப்புத் தினத்தின் தொனிப்பொருளாக ''குழந்தைகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகத்தை முன்னேற்றி வறுமையை ஒழிக்க இணைந்து செயற்படுவோம்'' என அமைந்துள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் அனைத்து நிலைகளிலும் வறுமைக்குத் தீர்வு காண ஐ.நா. இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில், இன்று இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்து வருகிறது. அண்டைநாடுகளின் உதவிகளாலும், ஐ.எம்.எப்பின் அரவணைப்பாலும் பாழ்குழியிலிருந்து சிறிது மீண்டுள்ளபோதும் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம், மந்தபோசணை என மக்களின் வாழ்க்கை இருண்டுபோயுள்ளது. இந்நிலை எப்போது மாறும் என்ற ஏக்கத்தில் வீ(வி)தி வழி உலவும் மக்களின் கண்கள் அரண்டுபோயுள்ளன.

**எது வறுமை**

அனைவருக்கும் உணவு, குடிநீர், மருத்துவம், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், உடை, இருப்பிடம் கிடைக்க வேண்டும். இவை இல்லாதவர்கள் வறுமை நிலையில் இருப்பவர்கள் என கருதப்படுகின்றனர். வறுமை, வன்முறைக்கு வழிவகுக்கிறது. உலகில் அதிக மரணங்கள் வறுமையினால்தான் ஏற்படுகின்றன. எய்ட்ஸ், மலேரியா, டிபி., போன்ற நோய்களால் உயிரிழப்பவர்களை விட, வறுமையினால் உயிரிழப்பவர்கள் அதிகம்.

வசதி படைத்தோர் - ஏழைகளுக்கு இடையேயான இடைவெளி அதிகரிக்கிறது. வளராத நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, உலகின் முதல் மூன்று பணக்காரர்களின் சொத்து மதிப்பை விட குறைவு. உலக பணக்காரர்களில்20 சதவீதம் பேர் உலகின் மொத்த வளங்களில் 86 சதவீதத்தை வைத்துள்ளனர். மீதமுள்ள 80 சதவீத மக்களுக்கு கிடைப்பது 14 சதவீதம் மட்டுமே.

**அக்கறையின்மை**

ஏழ்மை நிலையில் மக்கள் தள்ளப்படுவதற்கு அரசியல்வாதிகள், ஊழல், இலஞ்சம், கல்வியறிவின்மை, வேலை வாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, புதிய தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தாமை போன்ற காரணங்கள் உள்ளன. இருப்பினும், ஏழைகளின் பசியைப் போக்க எந்த அரசுக்கும் அக்கறை இல்லாததே முக்கிய காரணம். ஆட்சிக்கு வந்தால் அதைத் தருவோம், இதைத் தருவோம் என தேர்தலின்போது அனைத்து கட்சிகளும் வாக்குறுதிகளை அள்ளி விடுகின்றன. ஆனால், ஆட்சியில் அமர்ந்தவுடன், மக்களின் பசியைக்கூட போக்க அவை முன்வருவதில்லை.

ஏழைகளை ஒரேநாளில் வசதியானவர்களாக மாற்ற முடியாது. இப்போதிருந்து தொலைநோக்குத் திட்டங்களை தீட்டினால், வரும் சந்ததியினரும் வறுமைக்கோட்டில் வசிப்பதை தவிர்க்கலாம். கல்வியறிவே ஒரு நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்கிறது. உலகில் 11 கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகள் பாடசாலைளுக்கு செல்வதில்லை என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நாவும், அனைத்து நாடுகளும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறது. அரசுகளுடன் மக்களும் முயற்சி எடுத்தால், ஏழ்மை நிலையை முடிந்தளவு குறைக்கலாம்.

### பிரிட்டன் அரசியலில் குழப்பம்



# முடிவுக்கு வருகிறது பிரதமர் லிஸ் ட்ரெஸ் ஆட்சி?

பிரிட்டனில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக புதிதாக பதவியேற்றுள்ள பிரதமர் லிஸ் ட்ரெஸ் (Liz Truss) பதவியை இழக்கும் சூழல் உருவாகியுள்ளது.

சமீபத்தில் லிஸ் ட்ரெஸ் அமைச்சரவை தனது பட்ஜெட்டில் வசதி படைத்தவர்களுக்கு வரி குறைப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. பிரதமர் லிஸின் இந்த நடவடிக்கையால் பிரிட்டன் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. இதில் ஏற்படும் இழப்பை சரிசெய்வதற்கு மாற்றுத் திட்டம் இல்லாததால் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றது. அமெரிக்க டொலருக்கு நிகரான பிரிட்டன் பவுண்டின் விலை வீழ்ச்சியடைந்ததோடு, கடன் விகிதங்களும் அதிகரித்துள்ளன.

இதையடுத்து நிதியமைச்சர் குவாசி குவார்டெங்கை அதிரடியாக நீக்கிய லிஸ், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெர்மி ஹன்டை புதிய நிதியமைச்சராக நியமனம் செய்தார்.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடி காரணமான லிஸ் ட்ரஸை பதவியிலிருந்து நீக்க கன்சர்வேட்டிவ் கட்சியின் ஒரு தரப்பினர் திட்டமிட்டிருப்பதாக பிரிட்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த வாரத்தில் லிஸ் டிரஸுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவிருப்பதாகவும் தெரிகிறது. பிரிட்டன் அடுத்த பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கிற்கு வாய்ப்புள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்த ரிஷி சுனக் பொருளாதார நெருக்கடியை சிறப்பாக கையாண்ட நிலையில்தான் தற்போதைய சூழலில் அவரை பிரதமராக்க கன்சர்வேட்டிவ் கட்சியின் ஒரு தரப்பு முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும், சுனக்கிற்கு போட்டியாக முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உட்பட 3 பேரின் பெயர்களை கட்சியின் மற்றொரு பிரிவினர் முன்னிலைப்படுத்த முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுவதால் பிரிட்டன் அரசியலில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.



வெனிசூலாவில் மண்சரிவில் சிக்கி காணாமல்போன இருவர் பல மணிநேர போராட்டத்துக்குப் பின் மீட்கப்பட்டபோது.......

# ஈரானின் ஆளில்லா ட்ரோன்கள் மூலம் உக்ரைன் மீது ரஷ்யா தொடர் தாக்குதல்

### பற்றியெரியும் தலைநகர் கீவ்



ரஷ்யா, ஈரானிலிருந்து தருவிக்கப்பட்ட ஆளில்லா ட்ரோன்கள் மூலம் உக்ரைனில் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவ் ரயில் நிலையத்துக்கு அருகே, நேற்றுக் காலை ரஷ்யா ட்ரோன்கள் மூலம் தொடர் தாக்குதல் நடத்தியது. பல இடங்களில் தீப்பற்றி எரிந்தன, பல குடியிருப்புக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. இத்தாக்குதலில் பலியானவர்கள் மற்றும் சேதவிவரங்கள் குறித்த உடனடியாக தகவல் எதுவும் வெளியாகவில்லை.

ஈரானிலிருந்து 'கமிஹாசி' (kamikaze DRONE) என்ற ஆளில்லா ட்ரோன் விமானங்களை ரஷ்யா வாங்கியுள்ளது. நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இந்தப் போர் இன்று 237ஆவது நாளை எட்டியுள்ளது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. போரில் கைப்பற்றிய உக்ரைனின் சில நகரங்களை ரஷ்யா தங்கள் நாட்டுடன் இணைத்துக்கொண்டது. இதனைத் தொடர்ந்து போர் மீண்டும் தீவிரமடைந்து வருகிறது.

ரஷ்யப் படைகள் கைப்பற்றிய பகுதிகளை உக்ரைன் மீட்டு வருகிறது. இதனால், இரு தரப்புக்கும் இடையே மோதல் அதிகரித்து உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன. இந்தப் போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்தபோதும் போரின் போக்கு, 3ஆம் உலகப் போருக்கு வழிவகுக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இதனிடையே, உக்ரைனுடனான போரில் பயன்படுத்த ஈரானிடமிருந்து ரஷ்யா ஆளில்லா ட்ரோன்களை வாங்கியதாக கடந்த சில மாதங்களுக்கு முன் தகவல் வெளியானது. ஆனால், அதை ரஷ்யாவும், ஈரானும் உறுதிப்படுத்தாமல் இருந்த நிலையில், உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நேற்று தாக்குதல் நடத்தியது. ஆளில்லா ட்ரோன் விமானங்கள் மீதும் ஏவுகணை, வெடிபொருட்களை ஏவி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. கீவ் மீது தாக்குதல் நடத்த ரஷ்யா பயன்படுத்திய ட்ரோன் விமானங்கள் ஈரானிலிருந்து வாங்கப்பட்ட கமிஹாசி ட்ரோன் விமானங்கள் என்பது தெரியவந்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான போரில் ஈரானிலிருந்து வாங்கிய ட்ரோன் விமானங்களை ரஷ்யா பயன்படுத்தியது இதுவே முதல்முறையாகும். ஈரானிடமிருந்து வாங்கிய ட்ரோன்களை ரஷ்யா பயன்படுத்துவதால், உக்ரைனுக்கு ஆதரவாக இஸ்ரேல் செயற்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையேயான மோதல் மேற்கத்தேய நாடுகள், வளைகுடா நாடுகள் என பல நாடுகளை போர் வளையத்திற்குள் கொண்டுவந்துள்ளதால் 3ஆம் உலகப் போருக்கான ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**உக்ரைன் படைக்கு பயிற்சியளிக்கும் ஐரோப்பிய ஒன்றியம்**

ஐரோப்பிய ஒன்றியம் உக்ரைனுக்கு இராணுவ ஆதரவை அதிகரிக்கவுள்ளது. அதன்படி, ஐரோப்பிய ஒன்றியம் 15,000 உக்ரேனிய வீரர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் ஆயுதங்களுக்காக 500 மில்லியன் யூரோக்களை கூடுதலாக வழங்கவுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகள் லக்சம்போர்க்கில் நடைபெறும் கூட்டத்தில் இது தொடர்பான முக்கிய முடிவுகளில் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த மாதம் முதல் உக்ரேனிய வீரர்களுக்கு பயிற்சியளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7